ஸ்ரீ ஹரி:


## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 6 மே 2001 கானம் : 10


## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 66 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 5 |
| 4. | எந்தரோ மஹானுபாவுலு - 37 | 7 |
| 5. | ஸனாதன புதிர் - பகுதி - 1 | 12 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை - 42 | 15 |
| 7. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 1 | 16a |
| 8. | ப்ருது மஹாராஜாவிற்கு ஸனகாதிகளின் உபதேசம் | 17 |
| 9. | கூடாஒழுக்கம் | 21 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 69 | 25 |
| 11. | மஹாபாரத கதைகள் - நளோபாக்யானம் - தொடர்ச்சி | 30 |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் - பாகேஸ்ரீ தாளம் - ஆதி

*பல்லவி*

***ராதிகே! ராதிகே! பாலய மாம்***
***வரலக்ஷ்மி பாலய மாம் (ராதிகே)***

*அனுபல்லவி*

***ப்ருந்தாவனவாஸினி! ப்ரியஜன பாலினி***
***ப்ரேமமனோஹரி ப்ரேம ஸ்வரூபிணி (ராதிகே)***

*சரணங்கள்*

***ஸாதுஜனஸேவித வனிதே***
***க்ருஷ்ணபக்திம் தேஹி மே லலிதே***
***ஶ்யாமஸுந்தர ஹ்ருதயஸஞ்சாரிணி***
***ஶ்யாமளே கோமளே லலிதே வனிதே (ராதிகே)***

***யமுனாநதீதீர ஸஞ்சாரிணி***
***யாதவகுலஜன ப்ரியதேவி***
***வ்ருஷபானுகுமாரி பர்ஷாணாராணி***
***வ்ரஜயுவராஜ க்ரீடிததேவி (ராதிகே)***

***மதுரபுரிவாஸினி மதுரபாஷிணி***
***மாணிக்யவீணா கானரஸிகே***
***மதுரமுரளீதர ப்ரியதேவி***
***மங்களம் பவது தே ஸந்ததம் (ராதிகே)***

*நாமாவளி*

ஜய ராதே ஸ்ரீ குஞ்ஜ விஹாரிணி
மஞ்ஜுள பாஷிணி மோஹன மோஹினி
மதகஜ காமினி மன ஆஹ்லாதினி
மதுர மதுரமஹோ மதுர ஸ்வரூபிணி

**66**

நம்முடைய ஸ்வாமிகள், குருவாயூர் க்ஷேத்திரத்தில், முதல் ஸப்தாஹ ஸதக்ரது நடத்த விருப்பம் கொண்டார்கள். ஆனால் அதற்கு ஏற்பாடுகள் செய்ய கால அவகாசம் இல்லாததால் பெங்களூர் மல்லேஸ்வரம், ஸ்ரீ சங்கர மடத்தில், முதல் ஸப்தாஹ ஸதக்ரது நடைபெற்றது. இருந்தபொழுதிலும், எந்த க்ஷேத்ரத்தில் ஒரு ஸப்தாஹம் செய்தாலே அதிவிசேஷமோ அத்தகைய க்ஷேத்ரமான ஸ்ரீ குருவாயூரில், சென்ற வருடம் ஸ்ரீ மஹாபெரியவாளின் ஜயந்தி ஸமயத்தில், ஸப்தாஹ ஸதக்ரது நடந்தேறியது. அப்பொழுதே அடுத்த ஸதக்ரதுவை ப்ருந்தாவனத்தில் நடத்த ஸ்ரீ ஸ்வாமிகள் தீர்மானித்தார்கள். அதன்படி, ஸ்ரீ ப்ருந்தாவனத்தில் மூன்றாம் ஸதக்ரது மார்ச் 18-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை மிகவும் விமர்சையாக நடந்தேறியது.

மார்ச் 18-ம் தேதி மாலை ஸ்ரீ ரகுநாத் ஆஸ்ரமத்தின் ஸ்வாமிகள் பாலயோகிராஜ் குத்துவிளக்கேற்றி ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹத்தை ஆரம்பித்து வைத்தார்கள். அன்று மாலை ஸ்ரீமத் பாகவத மஹாத்ம்ய படனமும், ப்ரவசனமும் நடைபெற்றது. இந்த ஸப்தாஹத்தில், ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீகாந்த ஸர்மாவின் சிஷ்யர் மும்பய் ஸ்ரீ சந்திரசேகர சர்மா அவர்களின் தசமஸ்கந்த ப்ரவசனம் நடைபெற்றது. மார்ச் 24-ம் தேதி அன்று இரவு ப்ருந்தாவன வீதிகளில் நாம ஸங்கீர்த்தனத்துடன் விமரிசையாக ஜானவாஸம் நடைபெற்றது. மார்ச் 25-ம் தேதி காலை அவப்ருத ஸ்நாநமும் அதையொட்டி ஸ்ரீ ராதாகல்யாணமும் நடைபெற்றது.

ஸ்ரீ ஸ்வாமிகள், பக்தர்களுடன் அவ்வப்பொழுது, லீலாஸ்தானங்களைச் சென்று தர்சனம் செய்து வந்தார்கள். இந்த ஸப்தாஹத்தில் சுமார் 1000 பக்தர்கள், டெல்லி, பம்பாய், பெங்களூர், சென்னை போன்ற நகரங்களிலிருந்து வந்து கலந்துகொண்டார்கள்.

ஸந்தர்பணை முழுவதும் கும்பகோணம் J. ஸ்ரீனிவாசன் பொறுப்பேற்று கவனித்துக்கொண்டார். மற்ற அனைத்து ஏற்பாடுகளையும் டெல்லி ஸத்ஸங்கத்து அன்பர்களான ஸுகுமாரும், பாஸ்கரும் பொறுப்பேற்று கவனித்துக்கொண்டார்கள். இப்படியாக இந்த மூன்றாம் ஸப்தாஹ ஸப்தக்ரது இனிதே நடைபெற்றது.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

ஸ்ரீ ஹரி:

## குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்

24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை-83.

## அறிவிப்பு

நமது மிஷன் சார்பில் ஜூலை '95 முதல் ''மதுரமுரளி'' நம்மை ஆன்மீக பாதையில் அழைத்துச் செல்கிறது. வரும் ஜூன் 2001ல் மதுரமுரளி ஆரம்பித்து ஆறு ஆண்டுகள் நிறைவடைகின்றது. சந்தாதாரர்கள் தங்களின் சந்தாவை புதுப்பித்துக்கொள்ள அழைக்கின்றோம்.

உள்நாடு : ஆண்டு சந்தா ரூ. 60/-
மூன்றாண்டு சந்தா ரூ. 180/-
ஆயுள் சந்தா ரூ. 750/-

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ. 300/-

சந்தாவை **''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்''** என்ற பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / காசோலை/ DD ஆக அனுப்பவும். மணிஆர்டர் மூலம் சந்தா அனுப்புபவர்கள் தயவுசெய்து தங்களது பெயர், Phone No., சந்தா எண், முழு முகவரி முதலியவற்றை place for communication என்ற இடத்தில் கட்டாயம் எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். யாரிடமிருந்து சந்தா வந்துள்ளது என்று தெரிந்து கொண்டால் தான் மதுரமுரளியை அவர்களுக்கு அனுப்பமுடியும். அதுபோல், சந்தாதாரர்களின் முகவரியில் மாறுதல் இருக்குமானால் அதையும் உடனுக்குடன் மிஷனுக்கு எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : நான் தியானம் செய்து வந்தபொழுது எனக்கு பலவிதமான தெய்வீக காட்சிகள் பஹிர்முகமாக கிடைத்து வந்தன. இப்பொழுது எல்லாம் அது மாதிரி அனுபவங்கள் ஏற்படுவதில்லையே! ஏன்?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : எப்பொழுது அனுபவங்கள் உள்ளே (அந்தர்முகமாக) ஏற்பட ஆரம்பிக்கின்றதோ அப்பொழுது வெளியில் ஏற்படும் அனுபவங்கள் எல்லாம் சிறிது சிறிதாக குறைய ஆரம்பித்துவிடும்.

*கேள்வி : என்னுடைய தாயாருக்கு நான் கோவிலுக்குச் செல்வதோ, ஸத்ஸங்கத்திற்கு வருவதோ பிடிக்கவில்லை. ஆனால், தாயாரை தெய்வமாக நினைத்து தாயார் சொல்வதையெல்லாம் கேட்க வேண்டும் என்று ஶாஸ்த்ரம் சொல்கின்றது. என் நிலை என்ன?*

பதில் : தாய் தகப்பனாருக்கு ஒரு குழந்தை அடங்கி நடந்து அவர்கள் சொல்படி நடக்கவேண்டும் என்பதுதான் ஶாஸ்த்ரம். அதுபோல் ஒரு கணவன் சொல்படிதான் மனைவி நடக்கவேண்டும் என்பதுதான் ஶாஸ்த்ரம். இவர்கள் சொல்லும் எல்லா லௌகீகமான விஷயங்களையும் கேட்டு அதன்படி நடக்கத்தான் வேண்டும். அதே ஸமயம், இவர்களில் எவர் ஒருவர் பகவத் விஷயத்திற்கு விரோதமாக சொல்கின்றாரோ அதைக் கேட்டு அதன்படி நடக்கவேண்டிய அவசியமில்லை.

கைகேயி தனக்காக வாங்கி வைத்திருந்த ராஜ்யத்தை பரதன் ஏற்கவில்லை. காரணம், அது தெய்வமான ராமருக்கு விரோதமான விஷயமாக இருந்ததால்தான். ஹிரண்யகசிபு விஷத்தை குடிக்க சொன்னாலும் ப்ரஹ்லாதன் ஸந்தோஷமாக குடித்தான். அவர் சொன்ன எல்லா விஷயத்தையும் கேட்டு நடந்த ப்ரஹ்லாதன், அவர் பகவந் நாமாவைச் சொல்லாதே என்பதை மட்டும் கேட்கவில்லை. அதுபோல் மீராவும், கணவர் ராணாகும்பா சொன்ன எல்லா விஷயத்தையும் கேட்டு நடந்தாள். ஆனால், க்ருஷ்ணபக்தி

செய்யாதே என்று சொன்னதை மட்டும் அவள் கேட்கவில்லை. ஆனால் இவர்கள் எல்லோருக்கும் இறைவன் அருள்புரிந்துதானே உள்ளான். ஆகவே, பகவத் விஷயத்திற்கு விரோதமாக யார் சொன்னாலும் கேட்கவேண்டிய அவச்யமில்லை.

***கேள்வி : பகவான் ஸ்ரீ க்ருஷ்ணர் ஏன் மயில்பீலியை தலையில் வைத்துள்ளார்?***

பதில் : பக்ஷிகளிலேயே மிகவும் காமம் குறைந்தது மயில்தான். பகவான் ஸ்ரீ க்ருஷ்ணர் மயில்பீலியை தலையில் வைத்துள்ளதற்கு அதுவும் ஒரு காரணம்.

***கேள்வி : ப்ரஹ்மம், பரமாத்மா, பகவான் இவைகள் எல்லாம் ஒரே பொருளைத்தான் குறிக்கின்றனவா?***

பதில் : ஒரே பொருளை, வேதாந்திகள் அனைவரும் ப்ரஹ்மம் என்றும், யோகிகள் பரமாத்மா என்றும், பக்தர்கள் பகவான் என்றும் குறிப்பிடுகின்றனர். இவைகள் எல்லாம் ஒரே பொருளைத்தான் குறிக்கின்றன.

***கேள்வி : எப்படியாவது காபி சாப்பிடுவதை விட்டு விடவேண்டும் என்று முயற்சிக்கின்றேன். ஆனால் முடியவில்லை. என்ன செய்வது?***

பதில் : மிகவும் பழக்கமான விஷயத்தை அவ்வளவு சுலபத்தில் விட முடியாது. நாம் எதையெல்லாம் தவறுதலாக பழக்கப்படுத்தி கொண்டுவிட்டு இப்பொழுது வருந்துகின்றோமோ, அவைகளை எல்லாம் நம் குழந்தைகள் பழக்கப்படுத்தாமல் இருப்பது நல்லது. குழந்தைகளுக்கு ஆரம்பத்திலிருந்தே காபியை பழக்கப்படுத்தாமல் இருந்தால் அவர்களுக்கு பல நன்மைகள் விளையும்.

***கேள்வி : எனக்கு எப்பொழுதும் எதிலும் ஒரு பயம் இருந்து கொண்டே இருக்கின்றது. இதிலிருந்து விடுபட எனக்கு ஒரு ஸ்தோத்திரம் (படிப்பதற்கு) சொல்லுங்களேன்.***

பதில் : தினமும் துளஸிதாஸரின் ஹனுமான்சாலீஸா சொல்லி வரலாம். நல்ல பலன் ஏற்படும்.

# எந்தரோ மஹானுபாவுலு - 36

நரஸிம்ஹ ஆவேசம் ஏற்பட்ட பிறகு மஹாப்ரபுவின் தேஹத்தில் பல அவதாரங்களின் ஆவேசம் வரலாயின. எந்த ஆவேசம் உண்டாகுமோ அந்த அவதாரத்தின் குணங்களுடன் அச்சமயம் அவர் காணப்படுவார்.

ஒரு ஸமயம், வராஹமூர்த்தி உபாசகரான முராரிகுப்தா பூஜை செய்துகொண்டிருக்கும்பொழுது அவரது வராஹ ஸ்தோத்ரத்தை கேட்ட ப்ரபுவிற்கு வராஹ ஆவேசம் ஏற்பட்டு, ''சூகரம் சூகரம்'' என்று உரக்கக் கூவிக்கொண்டு இரு கைகளையும் தரையில் ஊன்றி ஒரு வராஹத்தை போலவே நடந்துகொண்டு அவரது பூஜை அறைக்குள் நுழைந்தார். வழியில் இருந்த பெரிய நீர்க்குடத்தை தனது முகவாயால் உருட்டி தள்ளிக்கொண்டேச் சென்றார். ''முராரி, என்னை ஸ்துதி செய்'' என்று முராரிகுப்தாவிடம் கூறினார்.

கூப்பிய கரங்களுடன் முராரிகுப்தா, ''ப்ரபோ! வேத ஶாஸ்த்ரங்களும்கூட தங்களது மஹிமையை முழுவதும் கூறமுடியாமல் திணறும்பொழுது, நான் ஸாமான்யன், உங்களை எவ்விதம் துதித்துப் போற்றுவேன்'' என்றார். உடனே மஹாப்ரபு, ''முராரி ! நீ பயப்படாமல் நாமஸங்கீர்த்தனம் செய்துவா. அதற்கு யார் விக்னம் ஏற்படுத்தினாலும் நான் அவர்களை ஸம்ஹாரம் செய்வேன். நாமஸங்கீர்த்தனம் மூலமாக நான் இந்த ஜகத்தை உத்தாரணம் செய்வேன்'' என்று சொல்லிவிட்டு மூர்ச்சை அடைந்தார். ஆவேசம் தணிந்ததும் நினைவு பெற்று ஒன்றுமறியாதவர் போல் தன் வீட்டுக்குச் சென்றார் ப்ரபு. இப்படி அனேக **பா**வங்களால் தனது பக்தர்களை சுகப்படுத்திக்கொண்டு ஸ்ரீ க்ருஷ்ண கீர்த்தனம் செய்துகொண்டு காலத்தை கழித்தார்.

ஒரு ஸமயம், ஹரி நாமஸங்கீர்த்தனத்தின் நடுவில், ''நதியாவுக்கு சீக்கிரமே ஒரு மஹாபுருஷர் வரப்போகிறார். அவர் மூலம் நவத்வீபத்தில் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் ஹரிநாம கீர்த்தனம் ப்ரசாரமாகும்'' என்றார். பக்தர்கள் இதைக்கேட்டு

ஆனந்தம் அடைந்தனர். ஏனென்றால், நாம ஸங்கீர்த்தனத்தின் நடுவில் ப்ரபு உத்வேகத்துடன் எது சொன்னாலும் அது ஸத்தியமாகிவிடும். இது நடந்து நாலைந்து நாட்களில் நாமகீர்த்தனத்தின் நடுவில், ''எனது மூத்தவனும் பரமசகாவும் பரமபந்துவும், எனது ஸர்வஸ்வமுமான மஹாபுருஷர் அவதூத வேஷத்தில் நதியாவுக்கு வந்துவிட்டார். அவரைத் தேடி அழைத்து வாருங்கள்'' என்றார். உடனே அனைவரும் அவதூத மஹாபுருஷரை தேடச் சென்றனர். இந்த அவதூத மஹாபுருஷர்தான் நிமாயியின் ஸகோதரன் நிதாயி என்று அழைக்கப்படும் புகழ்பெற்ற நித்யானந்தர் ஆவார்.

ஹாடாயி ஓஜா, பத்மாவதி தம்பதியருக்கு மூத்த புதல்வனாக அவதரித்த நித்யானந்தர், கர்ப்பத்திலிருக்கும்பொழுதே அவரது தாயாருக்கு ஒரு திவ்யஸ்வப்னம் ஏற்பட்டது. அதில் ஒரு மஹாபுருஷர், ''உனக்கு பிறக்கும் மகன் பெரிய மஹானாகத் திகழ்வான். ஸ்ரீ க்ருஷ்ண கீர்த்தனத்தைப் பரப்புவான்'' என்று கூறினார்.

பால்யத்திலேயே நித்யானந்தர் மிகவும் புத்திசாலியாகவும், ராம க்ருஷ்ணலீலைகளையே அபிநயித்து பொழுதுபோக்குபவராகவும் இருந்தார். ஒரு ஸமயம், லக்ஷ்மணராக வேஷம் தரித்த அவர் இந்திரஜித்தாக நடித்த பையனின் பாணத்தால் நிஜமாகவே மூர்ச்சை அடைந்தார். எவ்வளவு எழுப்பியும் விழிக்கவே இல்லை. உடனே ராமராக நடித்த பையன் ஹனுமானாக நடித்தவனைக் கூப்பிட்டு ஸஞ்ஜீவனி பர்வதத்தைப்போல் ஒரு கல்லைத் தூக்கி நித்யானந்தரை முகர்ந்து பார்க்கச் சொல்லும்படி செய்தான். பிறகு தான் நித்யானந்தரின் மூர்ச்சை தெளிந்தது.

ஒருநாள், ஸன்யாசி ஒருவர் ஹாடாயி பண்டிதர் வீட்டுக்கு வந்து உபசாரம் பெற்றுக்கொண்டபின் நித்யாநந்தரை தன்னுடன் தீர்த்தயாத்திரைக்கு அனுப்பித்தருமாறு கேட்டார். ஹாடாயி பண்டிதர் வெகு நேர ஸஞ்சலத்துக்குப் பிறகு தனது ப்ராணனான மகனை ஸன்யாசியின் கோபத்துக்குப் பயந்து தியாகம் செய்தார். நித்யாநந்தர் ஒருவித மறுப்பும் தெரிவிக்காமல் ஸன்யாசியுடன் ப்ரஸன்னமாக

கிளம்பிவிட்டார். அதற்குப் பிறகு அவர் தனது குடும்பதாருடன் இணையவே இல்லை.

ஸன்யாசியுடன் நித்யானந்தர் பாரத தேசம் முழுவதும் தீர்த்தயாத்திரை செய்தார். இந்த தீர்த்த யாத்திரையின்பொழுது ஸ்ரீமான் மாதவேந்திரபுரியையும் தர்சித்தார். அவரிடமிருந்து க்ருஷ்ண பக்தியைப் பெற்றார். பிறகு அவர்கள் வ்ரஜபூமியை அடைந்தனர். பிறகு இந்த ஸன்யாசியைப் பற்றின வரலாறு தெரிய வரவில்லை. வ்ரஜ பூமியிலிருக்கும்பொழுது, நவத்வீபத்தில் ஸ்ரீ க்ருஷ்ணசந்திரரான மஹாப்ரபுவின் உதயம் ஏற்பட்டுள்ளதைப் பற்றி அறிந்துகொண்டு நித்யானந்தர் நவத்வீபத்தை அடைந்தார். இதை ஞான த்ருஷ்டியில் அறிந்துகொண்ட ப்ரபு அவரைத் தேடிவர பக்தர்களை அனுப்பினார். ஸ்ரீவாஸ்பண்டிதரும் ஹரிதாஸரும் எத்தனையோ தேடியும் அவர்களால் அவதூத மஹாபுருஷரை கண்டுபிடிக்க இயலவில்லை. அவர்கள் ப்ரபுவிடம் வந்து, ''நாங்கள் நவத்வீபத்தில் உள்ள மூலை முடுக்கெல்லாம் தேடிவிட்டோம். எங்களுக்கு தெரிந்தவர்கள் வீடுகளிலெல்லாம்கூட சென்று பார்த்தோம். நீங்கள் கூறிய மஹாபுருஷரைக் காணோமே!'' என்றனர்.

மஹாப்ரபு சிரித்துக்கொண்டே, ''அவர் இங்கு வந்து இருக்கிறார் என்று நேற்றே எனக்கு ஸ்வப்னம் ஏற்பட்டது. வாருங்கள் நாம் சென்று பார்க்கலாம்'' என்று கூறி அவரே கிளம்பி நேராக நந்தனாசார்யர் என்ற பண்டிதரின் வீட்டுக்குள் கிடுகிடுவென்று நுழைந்தார். அந்த வீட்டில் ஒரு தேஜஸ்வியான மிகமிக சுந்தரமான புருஷர் பத்மாசனத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டனர். மஹாப்ரபு பக்தர்களுடன் சென்று அவரது சரணங்களில் வந்தனம் செய்தார். பிறகு ஒரு மூலையில் மௌனமாக அமர்ந்தார். அந்த மஹாபுருஷரான நித்யானந்தர் இமை கொட்டாமல் ப்ரபுவைப் பார்த்துக்கொண்டிருந்தார். ப்ரபுவும் பக்தர்களுக்கு நித்யானந்தரின் மஹிமையை வெளிப்படுத்த நினைத்தார். ஸ்ரீவாஸ்பண்டிதரை ஸ்துதி ஸ்லோகம் ஏதாவது சொல்லுமாறு பணித்தார். ஸ்ரீவாஸ்பண்டிதரும் ப்ரபுவுக்கு மிகவும் பிடித்த ''பர்ஹாபீடம் நடவரவபு:'' என்று பாகவத ஸ்லோகத்தை **பா**வபூர்ணமாக சொல்ல ஆரம்பித்தார்.

அவதூத சிரோமணியான ஸ்ரீ ஶுகதேவரையே ப்ரேமையில் மூழ்கடிக்கச் செய்த இந்த ஸ்லோகம் நித்யானந்தரை என்ன பாடுபடுத்தும்? உடனே நித்யானந்தர் மூர்ச்சையானார். ப்ரபு இந்த ஸ்லோகத்தை மறுமுறை கூறச் சொன்னார். இப்போது நித்யானந்தர் பலமாக ஹுங்காரம் செய்தார். ரோமங்கள் குத்திட்டு நிற்க கண்களில் நீர் வெள்ளமாக பெருகியது. உடல் வியர்வையில் நனைந்தது. உன்மத்தம் பிடித்தவர்போல ந்ருத்யம் செய்ய ஆரம்பித்தார். உடனே ப்ரபு நித்யானந்தரை ஆலிங்கனம் செய்து கொண்டார். இரு மஹாபுருஷர்களும் ஹா க்ருஷ்ணா! ஹா க்ருஷ்ணா! என கதறிக்கொண்டே கண்ணீர் வடித்தனர். நிதாயி, நிமாயியின் மேல் மூர்ச்சை அடைந்து விழுந்தார். சிறிது நேரம் சென்றபின் மெதுவாக நிமாயி, ''ஸ்ரீபாத! இன்று தங்களது தரிசனத்தால் நாங்கள் தன்யர்கள் ஆனோம். உங்களது கருணையால் எங்களுக்கு உங்களின் தரிசனம் கிடைத்தது'' என்றார்.

உடனே நித்யானந்தர், ''நான் ஸ்ரீ க்ருஷ்ணனின் தர்சனத்திற்காக தேசம் தேசமாக யாத்திரை செய்தேன். எல்லா தீர்த்தங்களுக்கும் சென்றேன். பெரிய பெரிய கோவில்களுக்குச் சென்றேன். அங்குள்ள ஸிம்ஹாஸனங்கள் வெறுமையாக இருந்ததால், நான் பகவான் எங்கே? என்று கேட்டதும், பக்தர்கள் என்னைப் பைத்தியம் என்றனர். சிலர் மௌனமாக இருந்தனர். சிலர் ஆச்சரியம் அடைந்தனர். பிறகு வெகுநாள் தேடினேன். ஒரு பக்தர், பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் நவத்வீபத்தில் ப்ரகடனமாகி நாம ஸங்கீர்த்தனத்தைப் ப்ரசாரம் செய்துகொண்டிருக்கிறார் என்றார். அதைக் கேட்டு நான் நவத்வீபத்திற்கு வந்தேன். ஸ்ரீ க்ருஷ்ணன், க்ருபையுடன் எனக்கு தரிசனம் தந்திருக்கிறார். அவர் என்னை தனது சரணத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று கூறி வேரற்ற மரம் போல் மஹாப்ரபுவின் சரணங்களில் விழுந்தார்.

உடனே ப்ரபு அவரைத் தூக்கி அணைத்துக்கொண்டு, ''நீங்களே பகவத்ஸ்வரூபம் தானே! என்னை ஏன் ஸ்துதி செய்கிறீர்கள்! நான் ஒரு ஸாதாரணன்தான்'' என்றார். பக்தர்கள் இந்த காட்சியைக் கண்டு

ஆச்சரியத்தால் உறைந்து போயினர். முராரிகுப்தாவும் ஸ்ரீவாஸ்பண்டிதரும், ''இந்த இருவரில் யார் பெரியவர் என்று தெரியவில்லையே!'' என்று பேசிக்கொண்டனர். இரு மஹாபுருஷர்களும் நயனங்களால் பேசிக்கொண்ட மொழியை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது போயிற்று. நித்யானந்தரின் ஆத்மஸமர்ப்பணத்தை கௌராங்கர் ஏற்றுக்கொண்டு தனது அண்ணனாக அவரை ஸ்வீகரித்துக் கொண்டார்.

பிறகு அனைவரும் ஸ்ரீவாஸ்பண்டிதரின் வீட்டிற்கு வந்தனர். அங்கு வந்தவுடன் நாமஸங்கீர்த்தனத்தை ஆரம்பித்தனர். நித்யானந்தரின் வரவைக் கொண்டாடும் வகையில், ''ஹரிபோல் ஹரிபோல்'' என்று வெகு உத்ஸாகமாகக் கூவிக்கொண்டு பஜனை செய்தனர். கௌராங்கரும் நித்யானந்தரும் சரீர **பா**வத்தை மறந்து ஹரித்வனியுடன் நடனமாடினர். இந்தக் காட்சி, வர்ணனைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. பக்தர்கள் தம் சுயநினைவை இழந்தனர். வாத்யம் வாசிப்பது நின்று போயிற்று. மேலும் வாத்யங்கள் கைநழுவி விழுந்தன. ஜடமூர்த்திகளாக அனைவரும் நிதாயி, நிமாயி இருவரின் நடனத்தைக் கண்டு பக்தியில் களித்தனர்.

மஹாப்ரபு, நித்யானந்தரை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று சசீமாதாவிடம், ''அம்மா! உன் விச்வரூபனே திரும்ப வந்துவிட்டார், பார்'' என்றார். அன்னையும் தனது மூத்தமகனான விச்வரூபனாகவே நித்யானந்தரை **பா**விக்கலானார்.

ஸ்ரீவாஸ்பண்டிதரின் க்ருஹத்திலேயே அவர்களுக்கு புத்ரனாக நித்யானந்தர் வாத்ஸல்ய சுகத்தைக் கொடுத்துக்கொண்டு வசிக்கலானார். அவர் மிகவும் ஸஞ்சல புத்தியுள்ளவர். குழந்தையைப் போல் நடந்துகொள்வார். ஸ்ரீவாஸ்பண்டிதரும் அவரது மனைவி மாலினிதேவியும் நித்யானந்தர் தங்களது குழந்தையாகவே பரிபாலித்தனர். நித்யானந்தர், கௌராங்கரை தனது ஸர்வமுமாக நினைத்தார். ப்ரபுவும் நித்யானந்தரை தனது ஸஹோதரனாக **பா**வித்து ப்ரேமை செலுத்தி வந்தார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ஸனாதனப் புதிர்

வாசகர்களின் கவனத்திற்கு!

ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளாஜ்ஞைபடி, ‘‘ஸனாதனப் புதிர்’’ என்னும் ஒரு புதிய பகுதி நம் மதுரமுரளியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு மாதமும், நமது ஸனாதன மதத்திலிருந்து வினாக்கள் (புதிர்கள்) கேட்கப்படும். அந்தந்த மாதத்திற்கான புதிர்களுக்குள்ள பதில்களை அந்த மாதத்தின் 25-ந் தேதிக்குள் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவேண்டும்.

அதாவது ஸனாதனப்புதிர் பகுதி - 1க்கான பதில்களை மே 25-ந் தேதிக்குள் அனுப்பவேண்டும்.

சரியான விடைகளை எழுதி அனுப்புபவர்களுக்கு பரிசுகள் அளிக்கப்படும்.

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 250/- |
| இரண்டாம் பரிசு | ரூ. 150/- |
| மூன்றாம் பரிசு | ரூ. 100/- |

பரிசு பெற்றவர்களின் பெயரும் முகவரியும் மதுரமுரளியில் புதிருக்கான சரியான விடைகளுடன் அடுத்த மாதத்தில் வெளிவரும். 25-ந் தேதிக்குப் பிறகு வரும் பதில்கள் போட்டியில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. இதில் அனைவரும் பங்கு கொள்ள வேண்டுகிறோம்.

*பதில்கள் அனுப்ப வேண்டிய முகவரி :*

**GURUJI SRI MURALIDHARA SWAMIGAL MISSION,**
24, Netaji Nagar, Jafferkhanpet,
Chennai - 600 083.

இது ஸம்மந்தமாக ஸ்ரீ ஸ்வாமிகளை தொந்தரவு செய்ய வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

## ஸனாதனப் புதிர் - பகுதி - 1

**'ஆத்ரேயன்'**

1) யாக்ஞவல்க்ய ரிஷியின் இரு மனைவிகள் பெயர் என்ன?

2) வேதத்தை முற்றிலும் அறிந்தவரும், ஜனகரின் சபையில் யாக்ஞவல்க்ய ரிஷிக்கு ப்ரஹ்மத்தை பற்றிய கேள்விக் கணைகளைத் தொடுத்தவருமான பெண்மணி யார்?

3) ஆதிசங்கரரின் நான்கு ப்ரதான சீடர்கள் யார் யார்?

4) வால்மீகி முனிவரின் இயற்பெயர் என்ன?

5) ஸத்ரபதி சிவாஜி தனது குருவாக யாரைப் போற்றினார்?

6) விவேகானந்தரை சிகாகோ மத நல்லிண மஹாநாட்டிற்கு அனுப்பி வைக்கும் எண்ணம் முதல் முதலாக தமிழ்நாட்டை சேர்ந்த யாருக்கு உதித்தது?

7) ஜகன்நாத்பூரியில் உள்ள கோவர்த்தன பீடத்தின் தலைமையை ஏற்று நடத்த ஆதிசங்கரர் தனது சீடர்களில் யாரை நியமித்தார்?

8) அத்வைத மார்க்கத்தை போதித்த எந்த நூலுக்கு ஆதிசங்கரர் முதன்முறையாக விளக்கவுரை எழுதினார்?

9) சாயா தேவியின் மூன்று குழந்தைகளின் பெயர் என்ன? அவர்களிடையே உள்ள ஒற்றுமை என்ன? அவர்களது தந்தை பெயர் என்ன?

10) துர்யோதனன், எந்த முனிவருடைய சாபத்தால் தொடையில் அடிக்கப்பட்டு இறந்தான்?

11) இந்திரனுடைய வஜ்ராயுதம் எந்த முனிவருடைய எலும்பில் இருந்து செய்யப்பட்டது?

12) சிவாஜி மன்னர் தனது சிறிய வயதில் யாருடைய கீர்த்தனைகளால் ஈர்க்கப்பட்டார்?

13) சகுந்தலை, துஷ்யந்தனுக்கு கடிதம் எழுத எதை உபயோகப்படுத்தினாள்?


14) 18-ம் நாள் மஹாபாரதப் போரில் ஸஹாதேவன் தனது சபதப்படி யாரைக் கொன்றான்?

15) கோழையான அஶ்வத்தாமா பாண்டவர்களின் பாசறையை இரவில் பேடி மாதிரி தாக்கியபொழுது அவனுடன் இருந்தவர்கள் யார் யார்?

16) அலம்பசன் என்ற அரக்கன் மஹாபாரதப் போரில் கொன்ற அர்ஜுனனின் பிள்ளையின் பெயர் என்ன?

17) லங்கா நகரத்தை ராவணனுக்காக நிர்மானித்தது யார்?

18) மஹாபாரதக் காலத்தில் இப்பொழுது 'கோவா' என்று கூறப்படும் இடத்தின் பெயர் என்ன?



# பாலகர்களுக்கு ஒரு கதை - 42

கௌரவர்களுடன் நடந்த யுத்தத்தில் ஜயித்த பாண்டு புத்ரரான யுதிஷ்டிரர், மஹாராஜாவாக அபிஷேகம் செய்யப்பட்டு ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார். அப்பொழுது ஒரு ஸமயம், அவர் அஶ்வமேத யாகம் செய்தார். அந்த அஶ்வமேத யாகத்தில் பல தானங்களைச் செய்தார். அந்த யாகத்தில் கலந்துகொண்ட அனைவரும் மிகுந்த த்ருப்தியை அடைந்தனர். யுதிஷ்டிரர் செய்த அஶ்வமேதயாகம் ஒப்பு உயர்வு அற்றது என்று அனைவரும் பாராட்டினர்.

அப்பொழுது யாகசாலைக்குள் கீரிப்பிள்ளை ஒன்று வந்தது. அதனுடைய ஶரீரத்தின் ஒரு பகுதி சாம்பல் நிறமாகவும் மற்றொரு பகுதி பொன் நிறமாகவும் இருந்தது. அந்த கீரிப்பிள்ளை அந்த யாகசாலையில் தரையில் விழுந்து புரண்டது. பிறகு எழுந்து கொண்டு, ''இந்த யாகசாலையில் அனைவரும் அறிந்தோ அறியாமலோ பொய் சொல்கிறார்கள்'' என்று கூறியது. உடனே அனைவரும் நாங்கள் அறிந்து பொய் சொல்லவில்லை'' என்று கூறினார்கள்.

அப்பொழுது அந்தக் கீரிப்பிள்ளை, ''சிலகாலத்திற்கு முன் பக்கத்து நாட்டில் பயங்கரமான பஞ்சம் ஏற்பட்டது. அந்தப் பஞ்சத்தில் பலர் மாண்டனர். உணவு போதவில்லை. அந்த கஷ்டத்திலும் ஒரு பாடசாலை ஆசிரியர் தார்மிகராக இருந்தார். எப்படியென்றால், பட்டினியால் அவர் குடும்பம் வாடிக்கிடந்த பொழுது பக்தியுள்ள ஒரு மாணவன் அவருக்குக் கொஞ்சம் கோதுமை மாவு கொடுத்தான். அந்த கோதுமை மாவு மூலம் நான்கு ரொட்டிகள் செய்யப்பட்டன. அவர் குடும்பத்தில் வாத்தியார், அவருடைய மனைவி, மகன் மற்றும் மருமகள் என மொத்தம் நால்வர் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரொட்டி என்று எடுத்துக்கொண்டு சாப்பிடப்போகும் தருவாயில் பட்டினியுடன் இருந்த மற்றொருவர் அங்கு வந்தார்.

உடனே அவரை வரவேற்று ஆசிரியர் தன்னுடைய ரொட்டியை அவருக்கு அளித்தார். வந்தவருடைய பசி அடங்கவில்லை. ஆசிரியருடைய மனைவி தன்னுடைய பங்கை வந்தவருக்குக் கொடுத்தார். அப்படியும் அவர் பசி அடங்கவில்லை. உடனே மகனும் மருமகளும் தங்களுடைய பங்கை அளித்தனர். அப்பொழுது வந்தவர் முகத்தில் த்ருப்தி உண்டாயிற்று. அவர் அக்குடும்பத்தை வாழ்த்திவிட்டுச் சென்றார். அவர்கள் நால்வரும் மரணமடையும் தருவாயில் செய்த த்யாகம் முழுமனதோடு கூடியது. மிகவும் உயர்ந்தது.

தேவர்கள் இதைப் பார்த்து, ஆஶ்சர்யப்பட்டு ரதம் ஒன்றை மண்ணுலகிற்குக் கொண்டு வந்து அந்த நால்வரையும் பசியும், தாகமும் இல்லாத தேவலோகத்திற்கு அழைத்துச் சென்றனர். இந்தக் காட்சியைப் பார்த்த நான் அவர்கள் ரொட்டி செய்த இடத்தில் படுத்துப் புரண்டேன். தரையில் சிதறிக் கிடந்த கோதுமை மாவின் புனிதத்தன்மை என் உடலின் ஒரு பகுதியை பொன்மயமாக்கியது. மற்றொரு பகுதியும் பொன்மயமாகுமா என்று யாகசாலையைத் தேடிக்கொண்டு இங்கு வந்தேன். ஆனால் இங்கு புரண்டவுடன் என்னுடைய சரீரத்தின் மற்றொரு பகுதி பொன்மயமாகவில்லை. ஆகையால் இந்த தர்மபுத்ரருடைய யாகம், அந்த பாடசாலை ஆசிரியருடைய தன்னலமற்ற த்யாகத்திற்குச் ஸமமாகாது'' என்று கூறியது.

இதைக் கேட்ட அனைவரும் ஆச்சர்யப்பட்டனர். பாடசாலை ஆசிரியருடைய த்யாகத்திற்கு யுதிஷ்டிரருடைய ஆடம்பரமான யாகம் ஸமமாகாது என்பதை அனைவரும் ஒப்புக்கொண்டனர். ஆகையால் குழந்தைகளே, தன்னிடம் வசதியுள்ளபொழுது பிறருக்கு தானம் செய்வது சிறந்தது. ஆனால் ஏழ்மையிலும் ப்ராணனை த்யாகம் செய்தாவது பிறருக்கு தானம் செய்வது அனைத்திலும் சிறந்தது என்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா!

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 1

நம் ஸ்வாமிகள், ஸமீபத்தில் ப்ருந்தாவனத்தில் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ஶதக்ரது மஹோத்ஸவத்தை வெகு விமரிசையாக நடத்தினார்கள். அப்பொழுது மாத்யாஹ்னிக, இரவு நேரங்களில் சிறிது ஓய்வு நேரம் கிடைத்தாலும் பக்தர்களிடம் ப்ருந்தாவன க்ஷேத்ர மஹிமையைப் பற்றிக் கூறிக்கொண்டு இருப்பார்கள். ப்ருந்தாவனத்தில், ஸ்ரீ ராதாக்ருஷ்ண சைதன்யம் பரிபூர்ணமாக வ்யாபித்துள்ளது என்றும், உயர்ந்த **பா**வபக்தி நிரம்பியவர்கள் மட்டுமே அதை அனுபவிக்க முடியும் என்றும் கூறினார்கள். மேலும் இங்கு வாழும் ஒவ்வொரு ஜீவராசியும் மஹாத்மாதான் என்பதில் ஸந்தேஹமில்லை என்றும், உலகிற்குத் தெரியாமல் பல மஹான்கள் இன்றும் இங்கு வாஸம் செய்கிறார்கள் என்றும் கூறினார்கள்.

பூர்ண ப்ரும்ம ஸனாதனனான ஸ்ரீக்ருஷ்ணனின் மாதுர்யரஸம் நிரம்பி வழியும் க்ஷேத்ரம் ஸ்ரீ ப்ருந்தாவனம். புருஷோத்தமனான பகவான் ஸௌலப்யமாக பக்தர்களுடன் கலந்து எளிமையாக பழக தேர்ந்து எடுத்த க்ஷேத்ரம் இது. ஸ்ரீ ப்ருந்தாவனம், கண்ணனின் ஸ்வரூபமே. அவனது இருப்பிடங்களில் ஸர்வஶ்ரேஷ்டமான **தா**மம் (இருப்பிடம்) இதுவே. நித்ய விபூதியாக திகழும் விண்ணுலக ப்ருந்தாவனத்தின் ப்ரதிபிம்பம்தான் பூலோக ப்ருந்தாவனம். ஸ்தூல த்ருஷ்டிக்கு ஸாதாரணமாக புலப்படும் இந்த பூமி, தெய்வீகமும் ப்ரேமையும் நிரம்பிய த்ருஷ்டிக்கு, உண்மையான ஸ்வரூபத்துடன் புலப்படும்.

இன்றும், ப்ரேம பக்தர்களுக்கு ப்ருந்தாவன **தா**மத்தில் கண்ணன் தனது பரிவாரங்களுடன் அனந்த லீலைகளை ப்ரத்யக்ஷமாக நடத்திக்கொண்டுதான் இருக்கிறான். வ்ரஜபூமியில் ப்ரேமபக்தி ஒன்றுதான் பகவானை ஸம்பாதித்துத் தரும். இங்கு வாழ்ந்த, வாழும் மஹாத்மாக்கள், கண்ணனை அண்ட சராசரங்களின் நாயகனாக உபாஸனை செய்யவில்லை. ப்ரேமையுடனும் மாதுர்ய **பா**வத்துடனும், வெண்ணைக்கும் பாலுக்கும் ஏங்கும் கோபாலனாகவே உபாஸித்து அனுபவிக்கிறார்கள். மாடுமேய்க்கும் சிறுவனாக மயில்பீலியுடன் நடமாடும் ஸுந்தர புருஷனாக கண்டு ரஸிக்கிறார்கள். இப்படிப்பட்ட மஹாத்மாக்களின் சில அனுபவங்களை நாம் படித்து ரஸிப்போம்.

ப்ரேம பக்தியுடன் உபாஸனை செய்தால் அர்ச்சாவதார மூர்த்தியான கண்ணன் பக்தர்களுடன் பல லீலைகள் புரிகிறான். இங்கிலாந்தில், 1898ல், மே மாதம் 10-ம் தேதி பிறந்த ரோனால்ட் நிக்சன் என்ற ஆங்கிலேயனை ஸ்ரீக்ருஷ்ணப்ரேமாக மாற்றி விந்தை புரிந்த நம் கண்ணனின் லீலையை என்னவென்று சொல்வது? புகழ்பெற்ற கேம்ப்ரிட்ஜ் யூனிவர்ஸிடியில் கல்வி கற்று, ராயல் விமானப் படையில் பணி புரிந்த ரோனால்ட் நிக்சன், முதல் உலகப் போரின் ஸமயத்தில், தாக்குதல் விமானத்தில், (fighter plane) பெல்ஜியத்தை நோக்கிச் செல்லும்பொழுது உடன் சென்ற மற்ற விமானங்கள் அனைத்தும் நொறுங்கி அதிலிருந்து பைலட்டுகள் இறந்தனர். ஆனால், நிக்சனின் விமானம் மட்டும் ஜெர்மனிய தாக்குதலிலிருந்து அதிசயமாக தப்பியது. ஆனால், நிக்சன் நினைவிழந்தார். அவருக்கு நினைவு திரும்பியபொழுதுதான், லண்டனில் மிலிடரி மருத்துவமனையில் தான் இருப்பதை அறிந்தார். அடிக்கடி யாரோ, ‘‘நீ ஒரு மஹாசக்தியால் காப்பாற்றப்பட்டுள்ளாய். இந்தியாவுக்குச் சென்று அதைத் தேடு’’ என்று தன் காதருகில் கூறிக்கொண்டிருப்பது போல் உணர்ந்தார்.

அந்த சக்தியே அவருக்கு வழியையும் காண்பித்தது. அப்பொழுது லண்டனிலிருந்த ஞானேந்திர சக்ரவர்த்தி என்ற லக்னோ பல்கலைக்கழக அதிகாரி தனது பல்கலைகழகத்திற்காக ஆங்கிலேய ஆசிரியராக நிக்சனை வரும்படி அழைத்தார். இப்படித்தான் நிக்சன் லக்னோ வந்து சேர்ந்தார். டாக்டர் ஞானேந்திர சக்ரவர்த்தியுடனேயே இந்தியாவில் நிக்சன் வசித்தார். ஞானேந்த்ர சக்ரவர்த்தியின் மனைவி மோனிகாதேவி மிகவும் கற்றறிந்தவர். மிகுந்த ஆன்மீக சிந்தையுள்ளவர். வெளிப்பார்வைக்கு நாகரீக நங்கையாகத் தோன்றினாலும் உள்ளூற க்ருஷ்ண பக்தியை ரஹஸ்யமாக அந்த அம்மையார் செய்து வந்தார். நிக்சனை அவருக்கு மிகவும் பிடித்துவிட்டது. கோபாலன் என்றே நிக்சனை அந்த அம்மாள் அழைப்பாள். நிக்சனும் அவரை ‘அம்மா’ என்று கூப்பிடுவார். இந்தியாவில் நிக்சனுக்கு தனது ஆன்மீக அறிவை வளர்த்துக்கொள்ள நிறைய ஸந்தர்ப்பம் கிடைத்தது.

ஸம்ஸ்க்ருதம், வேதாந்தம், உபநிஷத், கீதை, பாகவதம் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்து க்ருஷ்ணனை தனது இஷ்ட


தேவதையாக உபாஸனை செய்ய ஆரம்பித்தார் நிக்சன். க்ருஷ்ண பஜனையைக் கேட்டு மோனிகாதேவி கண்ணீர் விடுவதைக் கண்டு நிக்சன் அதிசயிப்பார். ப்ருந்தாவனத்திலுள்ள ஸ்ரீ ராதாரமண கோவிலைச் சேர்ந்த ஸ்ரீ பாலக்ருஷ்ண கோஸ்வாமியிடம் மோனிகாதேவி, தீக்ஷை பெற்றவர். தனது ஸாதனையை மிகவும் ரஹஸ்யமாக வைத்திருந்தார். க்ருஷ்ண த்யானத்தில் சரீர ப்ரஜ்ஞையை இழந்து ஈடுபடுவார்.

டாக்டருக்கு பனாரஸிற்கு மாற்றலாயிற்று. அவர்களுடன் நிக்சனும் பனாரஸ் சென்றார். அங்குள்ள சூழ்நிலை மேலும் அவரது ஆன்மீக வாழ்க்கையை வளப்படுத்தவே, அவர் மோனிகா தேவியிடமே தனக்கு ஸன்யாஸம் அளிக்க வேண்டினார். மோனிகா தேவி ப்ருந்தாவனம் சென்று, தனது குருவிடம் முதலில், தான் ஸன்யாஸம் பெற்றுக்கொண்டு வந்து, நிக்சனுக்கும் ஸன்யாஸ தீக்ஷை அளித்தார். மோனிகாதேவி, ''யசோதாமா'' என்ற நாமமும் நிக்சன், ''க்ருஷ்ணப்ரேம்'' என்ற நாமமும் ஸன்யாஸத்திற்குப் பிறகு ஏற்றனர்.

தனது கணவனின் மறைவிற்குப் பிறகு யசோதாமா க்ருஷ்ண ப்ரேமுடனும் தனது மகளுடனும் ஹிமாலயமலை அடிவாரத்தை அடைந்து, மிர்டோலா என்ற இடத்தில் ஒரு ஆசிரமம் அமைத்து, 'உத்தர ப்ருந்தாவனம்' என்ற பெயரிட்டு, ஸ்ரீ ராதைக்கும் கண்ணனுக்கும் அழகான மூர்த்திகளை அமைத்து ஸ்ரீ க்ருஷ்ண உபாஸனை செய்ய ஆரம்பித்தார். க்ருஷ்ணப்ரேம் பூஜாரியாகவும் பரிசாரகனாகவும் பணிபுரிந்தார். பிக்ஷை எடுத்து ப்ரஸாதங்கள் செய்வார். வைஷ்ணவ ஸித்தாத்தங்களைத் தீவிரமாக க்ருஷ்ணப்ரேம் கடைபிடித்தார். யசோதாமாவிடம் பூர்ணசரணாகதி அடைந்து குருபக்தி செய்ததால், குருக்ருபையால், க்ருஷ்ணப்ரேமிற்கு ஆன்மீகத்தில் முன்னேற்றம் அதிகமாகியது.

ஒருமுறை க்ருஷ்ணப்ரேமை, அவர் வெளியில் தியானம் செய்யும் நேரத்தில் ஒரு விஷப்பூச்சி அவரது கணுக்காலில் கடித்துவிட்டது. அது புரையோடி எந்த வைத்யத்திற்கும் சரியாகாமல் இருந்தது. எந்த வைத்யர்களாலும் அதை குணப்படுத்த முடியாமல் போகவே காலையே அகற்றிவிடவேண்டும் என தீர்மானம் செய்தார்கள். அப்பொழுது யசோதாமா க்ருஷ்ணப்ரேமிடம், நீ எல்லா மருந்தையும் நிறுத்திவிட்டு என் சரணாம்ருதத்தை மட்டும் உட்கொண்டால் உன்

உடம்பு குணமாகிவிடும் என்று கூறினார். க்ருஷ்ணப்ரேமும் உடனே மருந்துகளை நிறுத்திவிட்டு தனது குருவின் பாததீர்த்தத்தை மட்டும் அருந்தினார். பிறகு, அவரது காலில் இருந்த புண் ஆச்சரியகரமாக குணமாகிவிட்டது!



யசோதாமா, தனது உபாஸனா மூர்த்தியான பாலகோபாலனிடம் வாத்ஸல்ய **பா**வத்தில் பக்தி செய்தார். இந்த பகவான் கோபாலனோ க்ருஷ்ணப்ரேமை தனது அண்ணனாகவே ஏற்றுக்கொண்டான். ஒருநாள், க்ருஷ்ணப்ரேம் ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருக்கும் ஸமயம், யாரோ தன்னை, ''அண்ணா அண்ணா'' என்று அழைப்பதை உணர்ந்தார். ஏதோ ப்ரமை என்று மறுபடியும் கண்ணை மூடிக்கொண்டார். மறுபடியும் இனிய குரலில், ''அண்ணா'' என்ற அழைப்பு கேட்கவே அந்த அழைப்பு கோவிலிலிருந்து வந்ததை உணர்ந்து அங்கு சென்றார். அங்கு மூலமூர்த்திதான் இருந்தார். மறுபடி குரல் கேட்டது. ''அண்ணா! ஜன்னல் திறந்திருக்கிறது. எனக்கு மிகவும் குளிருகிறது'' என்று மூல மூர்த்தியிடமிருந்து பேச்சுக்குரல் கேட்டதும், உள்ளே பதறிச் சென்று க்ருஷ்ணப்ரேம் ஜன்னல் கதவை மூடினார். மெல்லிய மெத்தையால் கண்ணனுக்குப் போர்த்திவிட்டார். பிறகு கண்ணனைப் பார்த்து, ''கண்ணா! உனக்குக் கூடவா குளிர் தெரிகிறது?'' என்றார். இதைக் கேட்டதும் கண்ணன் அழ ஆரம்பித்துவிட்டான்.

கண்ணனின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகுவதைக் கண்ட க்ருஷ்ணப்ரேம், பதறி ஹா! என்று கதறினார். தனது வஸ்த்ரத்தாலேயே கண்ணனின் கண்ணீரைத் துடைத்தார். கண்ணன் பிறகு உறங்கினான். ஆனால் க்ருஷ்ணப்ரேமிற்கு உறக்கம் போய்விட்டது. தன்னை கண்ணன் ''அண்ணா'' என்று அழைத்தானே, என எண்ணி எண்ணி உருகினார். கண்களிலிருந்து ஆறாக நீர் பெருக்கிய வண்ணம் இருந்தார். உனக்குக் கூடவா குளிருகிறது என்று தான் கேட்டதற்கு கண்ணன் அழுதது ஏன் என்று அவருக்கு மெதுவாக புரியலாயிற்று.

தனது பக்தனுக்காக அர்ச்சாவதார திருமேனியில் ஆவிர்பவித்து இருக்கும் க்ருஷ்ண பகவான் தன்னையும் அந்த திருமேனிக்குள் கட்டுப்படுத்திக்கொண்டு ப்ராக்ருதமாக நடந்து கொண்டு பக்தனையும் ஸந்தோஷப்படுத்தி தானும் ஆனந்தப்படுவானாம். அப்பொழுது அவன் தனது ஈஶ்வர குணங்களைக் காட்டிக்கொள்ள மாட்டான். இதனால்தான் உனக்குக் கூடவா குளிருகிறது? என்று க்ருஷ்ணப்ரேம், க்ருஷ்ணனிடம் கேட்டவுடன் அவனுக்கு வருத்தமுண்டாகி கண்ணீர்விட்டானாம். க்ருஷ்ணப்ரேமிற்கு கண்ணனின் மனநிலை தானாகவே புரிந்து விட்டது. எந்த வஸ்த்ரத்தில் கண்ணனின் கண்ணீரைத் துடைத்தாரோ அதை ஒரு தாயத்தில் வைத்து அடைத்து தனது வாழ்நாள் முழுவதும் தன் நெஞ்சிலேயே அணிந்துகொண்டிருந்தார்.

ஒரு முறை க்ருஷ்ணப்ரேம், ஹல்வா செய்து கண்ணனுக்கு நைவேத்யம் செய்துவிட்டு கதவை மூடி வெளியே வந்து த்யானத்தில் அமர்ந்துகொண்டார். திடீரென்று க்ருஷ்ணப்ரேம் எழுந்து, ''நாம் உள்ளே சென்று பகவான் ஹல்வாவை சாப்பிட்டாரா என்று பார்ப்போம்'' என்று கூறி மற்ற ஆசிரமவாஸிகளுடன் கர்ப்பக்ருஹம் சென்று கதவைத் திறந்து பார்த்தார். பாத்திரத்திலுள்ள ஹல்வாவில் பாதியை கண்ணன் வழித்து விழுங்கியிருந்ததைக் கண்டு, அனைவரும் ஆனந்தக் கூத்தாடி பஜனை செய்து மகிழ்ந்தனர்.

ஒருநாள், டோலோத்ஸவம் முடிந்து கண்ணனையும் ராதையையும் தூங்கப் பண்ணிவிட்டு கதவைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்தார் க்ருஷ்ணப்ரேம். மறுநாள் காலை கதவை திறந்து

உள்ளே சென்றால், அங்கு ராதா ராணியின் தங்க நெக்லேஸை கண்ணன் தன் கழுத்தில் அணிந்து கொண்டிருந்தான். கண்ணனின் தங்க நூபுரம் ராதையின் திருவடிகளில் ஒளிர்ந்தன. உடனே அவர் தனது ஆஸ்ரம பக்தர்களை விளித்து கண்ணனின் கேளிக்கைகளை காணீர் என ஆனந்தத்துடன் கூறினார். தனது பக்தியினால் க்ருஷ்ணப்ரேம், ராதாராணியுடன் நேரடியாக பேசக்கூடியவராக இருந்தார்.

ஆர்த்தி என்ற அவருடைய சிஷ்யை அலஹாபாத்திலிருந்து மிர்டோலா வருவதற்கு பணமின்றி தனது வளையல்களை விற்று வந்து சேர்ந்தார். அவள் வருவதற்கு முன் இரவு, க்ருஷ்ணப்ரேமிடம் ராதாதேவி தனது வளையல்களை தந்து, ''உனது சிஷ்யை தன் வளையல்களை விற்று அந்த பணத்தைக்கொண்டு பயணசெலவு செய்து வந்துகொண்டிருக்கிறாள். அவள் கைகளில் வளையல் இல்லாமல் வெறுமனே பார்க்க எனக்கு வருத்தமாக இருக்கிறது. என் வளையல்களைத் தருகிறேன். அவளிடம் கொடுத்து அணியச் சொல்'' என்று கூறினாள். ராதாராணி கொடுத்த வளையல்களை க்ருஷ்ணப்ரேம் தந்ததும் ஆர்த்தி பரவசமடைந்தாள்.

1931-ம் ஆண்டு க்ருஷ்ணப்ரேம் ப்ருந்தாவனம் வந்தார். ஒவ்வொரு ஆண்டும் க்ருஷ்ணப்ரேம், தனுர் மாதங்களில் ப்ருந்தாவனத்தில்தான் வசிப்பார். அவர் தனது பரமகுருவான ஸ்ரீ பாலக்ருஷ்ணகோஸ்வாமியிடம் மிகுந்த பணிவுடன் பழகுவார். ஒரு ஆங்கிலேயனை துளஸிமாலையுடனும், ஊர்த்வ புண்டரத்துடனும், ஸதா ஹரிநாம உச்சரணையுடனும் கண்டு ப்ருந்தாவன வைஷ்ணவர்கள் அதிசயித்தனர். ராதாரமணர் கோவிலில் அவரை அனுமதிக்க முதலில் எதிர்ப்பு இருந்தது. பிறகு அவரது உண்மையான பக்தியைக் கண்டு அங்கிருந்த வைஷ்ணவர்கள் எல்லோரும் அவருக்கு 'கௌர ப்ரேம நிதி' என்ற விருதையே அளித்தனர்.

முதலில் க்ருஷ்ணப்ரேமிற்கு, சைதன்ய மஹாப்ரபு கண்ணனின் அவதாரம்தானா என்ற ஸந்தேஹமிருந்தது. ஸ்ரீ க்ருஷ்ணன் அவரது கனவில் தோன்றி, ''நானும், மஹாப்ரபுவும் ஒன்று தான்'' என்று கூறினான். பிறகு க்ருஷ்ணப்ரேமிற்கு மஹாப்ரபுவிடம் மிக அபரிதமான பக்தியுணர்வு ஏற்பட்டது.

க்ருஷ்ணப்ரேம், திருவண்ணாமலைக்கு வந்து பகவான் ரமண மஹர்ஷி முன் அமர்ந்தபொழுது மிக உன்னதமான ஆன்மீக அனுபவத்தை அடைந்தார். க்ருஷ்ணப்ரேம், 1948-ம் ஆண்டு ரமணாச்ரமம் வந்தார். அவர் அங்கு ஹாலில் நுழைந்த ஸமயம், பகவான் ரமண மஹர்ஷி, சோபாவில் சாய்ந்து அமர்ந்திருந்தார். க்ருஷ்ணப்ரேம் மற்றவர்களுடன் மௌனமாக த்யானம் செய்ய அமர்ந்தார். உட்கார்ந்த உடனே அவருக்கு 'நீ யார்', 'நீ யார்' என்று யாரோ தன்னை கேள்வி கேட்பதை உணர்ந்தார். எத்தனைதான் அலட்சியப்படுத்தினாலும் மேலும் மேலும் இந்தக் கேள்வி அவரது மனதுக்குள் யாரோ கதவைத் தட்டுவது போல் கேட்டுக்கொண்டே இருந்தது. உடனே அவர், 'நான் க்ருஷ்ணனின் சேவகன்' என்று பதில் சொல்லிக்கொண்டார்.

மறுபடியும் ''க்ருஷ்ணன் யார்'' என்ற வினா எழுந்தது. அவர் ''நந்தனின் மகன்'' என்று பதிலுரைத்துக்கொண்டார். ஆனால் கேள்விகள் ஓய்வில்லாமல் வந்துகொண்டிருந்தன. அவரும் ''க்ருஷ்ணன் ஒரு அவதாரம். அவன் அனைவருக்குள்ளும் இருப்பவன்'' என்றெல்லாம் சொல்லிப் பார்த்தார். ஆனால் கேள்விகள் ஓயவில்லை. அவர் மிகவும் குழப்பமும் துயரமும் அடைந்து த்யானம் செய்வதை நிறுத்திவிட்டு ஹாலை விட்டு வெளியே எழுந்து வந்தார். நிம்மதியை இழந்து கடைசியில் ஸ்ரீராதாதேவியை த்யானித்தார். அவரது த்யானத்தில் ராதாதேவியே அவருக்கு ''க்ருஷ்ணனைத் தவிர உலகில் எதுவும் கிடையாது. க்ருஷ்ணனை எப்படி வர்ணிக்க முடியும். க்ருஷ்ணன் க்ருஷ்ணன்தான்'' என பதிலுரைத்தாள்.

அடுத்தநாள் காலையில் க்ருஷ்ணப்ரேம் மறுபடி ரமண மஹரிஷியின் திருவடிக்கருகில் சென்று அமர்ந்தபொழுது ரமண மஹர்ஷி க்ருஷ்ணப்ரேமை தனது மின்னல் போன்ற பார்வையால் ஒருமுறை நோக்கி புன்னகை புரிந்தார். க்ருஷ்ணப்ரேம் பிறகு த்யானம் செய்ய ஆரம்பித்தார். இப்பொழுது இனம் புரியாத நிம்மதி நிலவியது. சிறிது நேரம் கழித்து மௌனத்திலேயே க்ருஷ்ணப்ரேம் மஹர்ஷியிடம் நீங்கள் யார்? என வினவினார். கேட்கும்பொழுதே தன்னையறியாமல் கண்ணைத் திறந்து பார்த்தார். அங்கே சோபாவில்

மஹர்ஷியைக் காணவில்லை. கண்ணை மூடிக்கொண்டு மறுபடியும் திறந்து பார்த்தால் அங்கே ரமண மஹர்ஷி அமர்ந்திருந்தார். க்ருஷ்ணப்ரேமிற்கு ரமண மஹர்ஷி தான் நாம ரூபங்களைக் கடந்தவர் என இவ்விதம் விளங்க வைத்துவிட்டார். இப்படிப்பட்ட மௌனமான ஸம்வாதம் ஒரு ஞானிக்கும் பக்தனுக்கும் இடையே நடந்தது.

ஞானி எப்போதும் ஒரு சாந்தியும் அமைதியும் நிறைந்த ஆனந்த ஸாகரத்தில் அமிழ்ந்திருப்பான். அந்த அமைதி சலனமற்றது. வர்ணனைக்கு அப்பாற்பட்டது. ஆனால் பக்தன், ப்ரேமஸாகரத்தில் நீந்திக் கொண்டிருப்பான். இறைவனின் அன்பும் அழகும் ததும்பி, நிறைந்த இந்த ப்ரேம ஸாகரம் உயிர்த் துடிப்புடனும், அனேக லீலாவினோதங்களுடனும் எல்லையற்ற ஆனந்தத்தை அளிக்கக்கூடியதாகவும் இருக்கும்.

ஸ்ரீ க்ருஷ்ணப்ரேம் பிறகு ஸ்ரீரங்கத்தை அடைந்து ஸ்ரீரங்கநாதரை ஸேவிக்கும்பொழுது தனது சரீர உணர்வை இழந்தார். ஒளிமயமான ஸாகரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக வெண்தாமரைகள் மலர்ந்து ஒவ்வொன்றிலும் ராதையும் கண்ணனும் நிற்கக் கண்டார். ராதை முறுவலுடன் நிற்க கண்ணன் குழலூதுவதையும் கண்டு ஆனந்தத்தால் கண்ணீர் பெருக்கினார்.

ஸ்ரீ க்ருஷ்ணப்ரேம், ''ஒரு குருவிடமும் க்ருஷ்ணனிடமும் பூர்ண சரணாகதிகொண்டு இருந்ததால்தான் ஆன்மீகத்தில் உன்னத நிலையை அடையமுடியும்'' என்று கூறுவார். கண்ணனுக்காக அனைத்தையும் த்யாகம் செய்து அஹங்காரத்தை அடியோடு அழித்து கண்ணனின் விருப்பப்படி வாழ்வதுதான் வாழ்க்கையாகும் என்று சொல்வார். 1965-ம் வருஷம், நவம்பர் மாதம், 14-ந் தேதி ஸ்ரீ க்ருஷ்ணப்ரேம் தனது ஸ்தூல சரீரத்தை உதிர்த்து ஸ்ரீராதாதேவியும் ஸ்ரீ க்ருஷ்ணனும் வாஸம் செய்யும் அழியாத ப்ருந்தாவனத்தை அடைந்தார்.

இதே தொடரில் ஸ்ரீ ப்ருந்தாவனத்தில் வாஸம் செய்த மேலும் பல மஹான்களின் இனிய அனுபவங்களை வரும் இதழ்களில் காண்போம்.

(தொடரும்)

**-ஜயந்தி ஜானகிராமன்**

# ப்ருது மஹாராஜாவிற்கு ஸனகாதிகளின் உபதேசம்

**(ஶ்ரீமத் பாகவதம், 4-வது ஸ்கந்தம், 22-வது அத்யாயம்)**

ஶ்ரீமத் பாகவதத்தில் நான்காவது ஸ்கந்தத்தில் ப்ருது என்ற மஹாராஜா, (பகவானுடைய அவதாரங்களில் ஒன்று ப்ருது அவதாரம்) ஸனகாதிகளைப் பார்த்து, ''ஸர்வ ஸ்வரூபியும், பிறப்பற்றவருமாகிய பகவான் தனது அடியார்களுக்கு அருள்புரிவதற்காக இந்த பூமியில் உங்களைப் போன்ற யோகிகளின் வடிவத்துடன் ஸஞ்சரிக்கிறார். உங்களிடம் விஶ்வாஸம் கொண்ட எனக்கு, இந்த ஸம்ஸாரத்தில் க்ஷேமமானது எந்த உபாயத்தால் நிஶ்சயமாகக் கிடைக்கும் என்று தாங்கள் உபதேசிக்க வேண்டும்'' என்று வினவினார்.

ப்ருதுவின் கேள்வியைக் கேட்ட ஸனத்குமாரர், ப்ருதுவைக் கொண்டாடிவிட்டு பின்வருமாறு கூறினார். ''பகவானுடைய திருவடிகளில் பக்தியானது நிலையாக இருந்தால் அது மனதில் உள்ள அழுக்கையும், மனக்கலக்கத்தையும் போக்குகிறது. மற்ற விஷயத்தில் பற்றற்றவனும், ஶரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டவனும், நிர்குணப் ப்ரஹ்மமுமான தன்னுடைய ஆத்மாவிடத்தில் எந்த உறுதியான பற்றுண்டோ அதுவே மனிதர்களுடைய நன்மைக்குக் காரணம் என்று ஶாஸ்த்ரங்களில் நன்கு விசாரிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பற்றானது ஶ்ரத்தை, பகவானுக்குத் தொண்டு செய்வது, தத்துவத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை, மனதை ஏகாக்ரபடுத்துவது என்ற யோகம், யோகீஶ்வர பகவானை உபாஸிப்பது, எப்பொழுதும் பவித்ரமான பகவானுடைய கதைகளைக் கேட்பது முதலியவற்றால் ஏற்படுகிறது. மேலும் விஷயங்களில் இன்பமடைகிறவர்களின் ஸங்கத்தை விடுவது, அவர்களுடைய கொள்கைகளை ஒதுக்குவது, ஏகாந்த வாஸம்,

ஹரியினுடைய குணாம்ருதத்தை கேட்பது, ஸ்மரிப்பது முதலியவற்றாலும் ப்ரஹ்மத்தினிடம் பற்றானது உண்டாகிறது.

அதேபோல் அஹிம்சை, துறவறம், பகவத் ஸ்மரணம், ப்ரஹ்மசர்யம், நியமங்கள், வைராக்யம், பிறரை- பிறவஸ்துவை நிந்தை செய்யாமல் இருப்பது, சீதோஷ்ண சுகதுக்கங்களில் விருப்பு, வெறுப்பு இல்லாமல் இருப்பது, அடிக்கடி காதுக்களுக்கு இனிமையான பகவத் குணங்களை கேட்பதால் வளருகின்ற ஹரிபக்தி முதலியவற்றாலும் அனாத்மவஸ்துக்களில் உள்ள பற்றானது நீங்கும். நிர்குணமான ப்ரஹ்மத்தினிடம் தீவிரமான ருசியும் ஏற்படும். எப்பொழுது ப்ரஹ்மத்தில் ரதி ஏற்படுகிறதோ அப்பொழுது மனிதன் குருவின் உபதேசத்தால் உண்டான ஞானம், வைராக்யம் ஆகியவைகளால் வீர்யமற்ற பஞ்சபூதத்தாலான இந்த ஶரீரத்தை எரித்துவிடுகிறான்.

அப்பொழுது மனிதன் மனது அழிந்தவனாய் மனதினால் ஏற்பட்ட கார்யம், அனுபவம் முதலியவை நீங்கியவனாய் தனக்கு வெளியே உள்ள வஸ்து, உள்ளே உள்ள வஸ்து என்று உணர்வதில்லை. எப்படி தூங்கி விழித்தவன் ஸ்வப்னத்தில் கண்ட பொருள்களை விழித்தவுடன் காண்பதில்லையோ, அதேபோல் ஆத்மாவிற்கும் மற்ற வஸ்துவிற்கும் எந்த இடைவெளி முன்பு இருந்ததாக கல்பிக்கப்பட்டதோ, அது மனது அழிந்தவனால் காணப்படுவதில்லை.

மனம் என்னும் உபாதி இருக்கும்வரை மனிதன் தன்னையும் இந்த்ரியங்களுக்கு புலப்படும் விஷயங்களையும், மற்ற பொருள்களையும் பார்க்கிறான். அந்த மனம் என்னும் உபாதி இல்லாதிருந்தால் எந்த விஷயங்களையும் உணர்வதில்லை. விஷயப்பற்றுள்ள இந்த்ரியங்களால் கலக்கப்பட்ட மனது, அந்த விஷயங்களைப் பற்றியே சிந்திப்பவர்களின் புத்தியை, செடிகளின் வேர் ஜலத்தை உறிஞ்சுவதுபோல் உறிஞ்சிவிடுகிறது. இப்படி விஷயங்களில் உள்ள பற்றை மஹான்கள், தன்னை ஏமாற்றுக்கொள்கிற தடை என்கிறார்கள். தன் ஸ்வரூபத்தைவிட்டு, மற்ற விஷயங்களை

ப்ரியமானதாகக் கருதுவதைவிட உலகத்தில் ஆத்மநலனிற்கு கேடான விஷயம் மனிதனுக்குக் கிடையாது.

விஷயங்களையும், இந்த்ரியங்களையும், பற்றி சிந்திப்பது மனிதர்களுக்கு எப்பொழுதுமே ஏமாற்றத்தைத் தருகிறது. அதனால் அறிவிழந்தவனாக தாவரம் போல் உணர்ச்சியற்றவனாகிறான். கடுமையான ஸம்ஸாரத்தைக் கடக்க விரும்புபவன் ஒருபொழுதும் விஷயங்களில் பற்றுதல் அடையக்கூடாது. ஏனெனில் விஷயத்தில் உள்ள ஆசையானது அறம், பொருள், இன்பம், வீடு முதலிய நான்கு புருஷார்த்தங்களுக்கும் முற்றிலும் இடையூறாகும்.

இந்த நான்கு புருஷார்த்தங்களுக்குள் மோக்ஷம் என்கிற புருஷார்த்தமே மிகுந்த ப்ரயோஜனமுடையதாக கருதப்படுகிறது. ஏனென்றால் மற்ற மூன்றும் எப்பொழுதும் அழிந்துவிடும் என்ற பயத்தை உடையவைகளாக இருக்கின்றன. மேலும் ஸத்வம் முதலிய குணங்களின் சேர்க்கையால் உயர்ந்த வஸ்து, தாழ்ந்த வஸ்து என்று எந்த வஸ்துக்கள் உண்டோ, பகவத்கடாக்ஷம் இல்லாமல் போனால் அவைகளுக்கும் க்ஷேமமானது இல்லை. ஆகையால் தேஹம், இந்த்ரியம், ப்ராணன், புத்தி, அஹங்காரம் இவைகளால் சூழப்பட்ட, சேதனர்களுடைய மனதிற்குள் ஜீவனை அடக்கியாளும் தன்மையுடன் எந்த பகவான் வ்யாபகமாயும் ஞான ரூபமாகவும், உள்ளே ப்ரகாசிப்பவராகவும் விளங்குகிறாரோ அவரை 'அவரேதான் நான்' என்ற அபேத புத்தியுடன் நீ அறிவாயாக.

பூமாலையில் 'பாம்பு' என்கிற ப்ராந்தியை விவேக புத்தியால் அடக்குவதுபோல் விவேகத்தால் விலக்கக்கூடிய இந்த ப்ரபஞ்சம் இன்னதென்று சொல்லமுடியாத மாயையினால் யாரிடத்தில் தோன்றுகிறதோ, அந்த நித்ய முக்தரும், ஞான ஸ்வரூபியும் கர்மவாஸனை, அஜ்ஞானம் முதலிய ஸம்பந்தமற்றவரும் ஆகிய பகவானை வணங்குகிறேன். ஸாதுக்கள் எந்த பகவானுடைய சரணாரவிந்த பக்தியினால் அவிழ்க்க முடியாத கர்மபந்தத்தை எப்படி அவிழ்க்கிறார்களோ, அப்படி பற்றற்ற முனிவர்களும், இந்த்ரிய கூட்டங்களை அடக்கியவர்களான யதிகளும்கூட

பகவத்பக்தி இல்லாவிடில் கர்மபந்தத்தைவிட முடியாது. அப்பேர்ப்பட்ட பகவானை நீ அரணாக அடை.

பகவான் என்கிற ஓடமின்றி காமம், கோபம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்னும் ஆறு பகைவர்களாகிய முதலைகளுடன் கூடிய பிறவிக்கடலை கடப்பது கஷ்டம். ஆகையால் நீ பூஜிக்கவேண்டிய பகவானுடைய திருவடியை ஓடமாக வைத்துக்கொண்டு கடக்க முடியாத துயரத்தைத் தாண்டு'' என்று ஸனகாதிகள் உபதேசித்தனர்.

இப்படி ஸனகாதி மஹர்ஷிகளிடம் பெற்ற உபதேசத்தின்படி, ப்ருதுமஹாராஜாவும் தன் ஸ்வரூபத்தில் லயித்தவராய், அனைத்து காரியங்களையும் ப்ரஹ்மார்ப்பணமாகச் செய்தார். பற்றுதலின்றி, ஏகாக்ரமான சித்தத்துடன் ராஜ்யத்தில் இருந்தபோதும், தான், தனது என்ற அபிமானமற்றவராய் இருந்தார். பசுக்களிடத்திலும், குருவிடத்திலும், பகவத் பக்தர்களிடமும், ப்ராஹ்மணர்களிடமும் பக்தியுள்ளவராகவும், வினயமுள்ளவராகவும் இருந்தார். தன்னை மாயைக்கு அப்பாற்பட்ட கர்மாக்களின் ஸாக்ஷியான பரமாத்மாவாக கருதுகின்றவராக நெடுங்காலம் ராஜ்யபரிபாலனம் செய்து வந்தார்.

**- பாலாஜி**

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English/Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures/essays
5. Articles on religion, Philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

# கூடா ஒழுக்கம்

இப்பொழுது, அடிக்கடி போலி சாமியார்களைப் பற்றி எல்லாம் செய்தித்தாள்களில் படிக்கின்றோம். ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸீதா பிராட்டியைக் கவர்ந்து செல்ல வரும் ராவணனும் ஸன்யாசி வேஷத்திலேயே வந்து கவர்ந்து செல்கின்றான். பிற்காலத்தில் இப்படியெல்லாம் நடக்கும் என அறிந்துதான் முன்கூட்டியே வால்மீகி முனிவர் இப்படி எழுதினார் போலும். நெஞ்சில் சிறிதளவும் குற்றவுணர்வு இல்லாதபடி ஆன்மீகவாதிகள் என்ற பெயரில் பலர் (போலிகள்) உலாவருகின்றார்கள். இவர்களில் சிலர் ஸமூக சேவைகளும் செய்து வருகின்றார்கள். மக்களின் குறைகளை எல்லாம் தங்களால் தீர்த்து வைக்க இயலும் என்றும் பறை சாற்றிக்கொண்டு வருகிறார்கள். பலர், மக்களை பிரமிக்க வைக்கும் மை வித்தை போன்ற மாய ஜலங்களையும் காட்டி பிரமிக்க வைக்கிறார்கள்.

இவர்களும் நல்லதைத் தானே செய்கிறார்கள், நல்ல காரியங்கள் பல செய்து வருகின்றார்களே! என்று இவர்களை ஆதரித்து இவர்கள் பக்கம் பேசுபவர்களும் பலர் உள்ளனர். இவர்களைப் பற்றி (இந்த போலிகளைப் பற்றி) தெய்வ புலவரான வள்ளுவர் கூடா ஒழுக்கம் என்ற அதிகாரத்தில் என்ன கூறுகிறார் என்று பார்ப்போமா!

*வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்*
*ஐந்தும் அகத்தே நகும்* 1

வெளியில் பிறர் பூஜிக்க தகுந்த தவக்கோலம் பூண்டு, ஆனால் அதற்குரிய தவநெறியில் நிற்காமல், தனிமையில் ஒழுக்கமில்லாத காரியத்தில் ஒருவன் ஈடுபடுவானாகில், அவனோடு கலந்து நின்ற ஐந்து பூதங்களும் தமக்குள்ளே சிரித்துக்கொள்ளும்.

*வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன் நெஞ்சம்*
*தான் அறி குற்றப்படின்* 2

ஒரு தவவேடம்கொண்டவன், இது ஒழுக்கமற்றது, குற்றமுடையது என்று அறிந்தும் அந்த காரியத்தை செய்வானாகின்

அக்குற்றம் அவன் நெஞ்சில் இருந்து உறுத்துமாகின், வானம் போல உயர்ந்த தவவேடம், அவனுக்கு என்ன பயனை தான் செய்யும் என்று அழகாக விளக்குகின்றார்.

*வலி இல் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்*
*புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று* 3

தவத்திற்கு இன்றியமையாதது மனத்தை அடக்குவதே ஆகும். மனத்தை அடக்கும் வல்லமை இல்லாத ஒருவன், தவக்கோலம் பூணுவது என்பது எப்படி ஆகும் எனில், ஒரு பசுவானது புலியின் தோல் போர்த்திக்கொண்டு புல்லை மேய்ந்தது போலாகும் என்கிறார் வள்ளுவர்.

*தவம் மறைந்து அல்லவை செய்தல் புதல் மறைந்து*
*வேட்டுவன் புள் சிமிழ்த்தற்று* 4

ஒருவன், தவக்கோலத்தால் தன்னை மறைத்துக்கொண்டு தவக்கோலத்தில் நின்று, எது எல்லாம் இழுக்கோ, அத்தகைய காரியத்தில் ஈடுபடுவது என்பது வேடன் ஒருவன் புதரில் மறைந்து பறவைகளை பிடிப்பதற்கு ஒப்பாகும்.

*பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று*
*ஏதம் பலவுந் தரும்* 5

ஆசைகளை எல்லாம் ஒழிக்காமல், ஆசைகளை ஒழித்து விட்டது போல் வேடம் பூண்டு, ஆசைகளின் தூண்டுதலினால் பல தவறான காரியங்களை செய்துவிட்ட ஒருவனுக்கு பிற்காலத்தில் என்னவெல்லாம் பாவம் செய்துவிட்டோம் என நினைத்து நினைத்து வருந்தக்கூடிய பல துன்பங்களை அவை தரும்

*நெஞ்சின் துறவார் துறந்தார் போல் வஞ்சித்து*
*வாழ்வாரின் வன்கணார் இல்* 6

ஒருவன் மனத்தளவில் பற்றுகளைத் துறக்காமல் பற்றுகளைத் துறந்துவிட்டவன் போல் வாழ்வானாகில், அந்த வஞ்சகனைவிட கொடியவன் உலகத்தில் வேறு யாரும் இருக்க முடியாது என்கிறார் தெய்வப் புலவர்.

*புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி*
*முக்கின் கரியார் உடைத்து* 7

குந்துமணி, மேலே சிவந்ததாக காணப்படினும் அதன் நுனியில் எப்படி ஒரு கரும்புள்ளி காணப்படுகிறதோ அதுபோல் வெளியில் உயர்ந்த தவக்கோலம் பூண்டு, உத்தமர்போல் வாழினும் உள்ளே கரும்புள்ளி போன்று குற்றமுள்ளவர்களும் உலகில் உள்ளனர் என்று கூறுகிறார் வள்ளுவர்.

*மனத்தது மாசாக மாண்டார் நீராடி*
*மறைந்து ஒழுகும் மாந்தர் பலர்* 8

மனத்தில் காமம், கோபம், அசூயை, உலகப்பற்று போன்ற எந்த ஆசைகளையும் துறக்காமல் தவக்கோலம் பூண்டு அதற்கேற்றார்போல், நீரில் நீராடி, வெளியில் பூஷணங்கள் எல்லாம் பிரமிக்கும்படி தரித்து உலகில் பலரையும் நம்ப வைக்கும்படியாக நடந்துகொள்பவர்களும் உலகில் உள்ளனர் என்கிறார் வள்ளுவர்.

*கணைக் கொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கன்ன*
*வினைபடு பாலால் கொளல்* 9

அம்பு நேராக தோன்றினும் பலருக்கு துன்பம் விளைவிக்கக்கூடிய கொடியதாக அது இருக்கிறது. யாழ் என்பது வளைந்து காணப்படினும், அது பலரையும் மகிழ்விக்ககூடிய இசையை கொடுக்கிறது. அதுபோல், தவக்கோலப் பூணாதவர்களில் பல நல்லவர்களும் உண்டு, தவக்கோலம் பூண்டவர்களில் பல கொடியவர்களும் உண்டு.

*மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்தது ஒழித்து விடின்* 10

தவக்கோலம் கொள்வதற்காக, பலர் மொட்டையடித்து கொள்கின்றனர், அல்லது ஜடை, தாடி போன்றவற்றை வைத்துக் கொள்கின்றனர். ஆனால், மனத்துக்குள் உள்ள மாசுக்களை அகற்றாவிட்டால் இத்தகைய கோலத்தால் என்ன பயன்தான்

விளையப் போகிறது. ஒருவனுக்கு மனத்துக்குள் உள்ள மாசுக்கள் அகன்றுவிட்டால் எதற்காக அவன் மொட்டை அடிக்கவேண்டும்? தாடி, மீசை வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே, வள்ளுவர் இந்த அதிகாரத்தினால் துறவறம் என்பது மனத்தை பொருத்தது என்பதை தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். அத்தகைய பக்குவத்துடன் ஒருவன் தவக்கோலம் பூணுவானாகில் அத்தகைய தவக்கோலத்திற்கு அவனால் பெருமை. அத்தகைய பக்குவம் இல்லாமல் ஒருவன் தவக்கோலம் பூணுவானாகில் அந்த தவக்கோலத்திற்கே அவனால் ஒரு இழிவு என்று கூறுகிறார் வள்ளுவர்.

---

ஸ்ரீ ஹரி:

**பூஜ்ய முரளீதர ஸ்வாமிகளின்**

## சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா

---

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆஜ்ஞைபடி ஆரம்பித்து இயங்கிவரும் ''சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா''வின் கிளைகளில், ''ஹரே ராம'' நாமஸங்கீர்த்தனம் தினமும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆஜ்ஞைபடி 30 பள்ளிகளில் இறைவணக்கத்தில், ''ஹரே ராம'' நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

தற்பொழுது கீழ்கண்ட பள்ளிகளிலும் இறைவணக்கத்தில்

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥''*

நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

1. Sugathi Balabhavan Jr. College, Manimangalam.
2. Meenakshi Ammal aided elementary School Neppathur, Sirkazhi.
3. Padma Seshadri Balabhavan Jr. School. (Main Branch) Backside of Valluvar Kottam. Nungambakkam, Chennai - 34.

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 69

*சௌரியங்காட்டினை சழுக்கற்றதென்றே*
*சலியாதிருந்தாய் அருணாசலா*

ஆத்மஸாக்ஷாத்காரம் அடைவதே உத்தமம். இந்த ஜன்மாவிலேயே எப்பாடுபட்டாவது கரையேற வேண்டும் என்று படிக்கிறோம், கேட்கிறோம். ஆனால் யாரும் அதற்காக ஒரு சிறிதளவாவது ப்ரயத்னம் செய்வதில்லை.

ஆத்மாவைப் பற்றி கேள்விப்பட்டால், அனைவருக்கும் ஆசை வருகிறது. இப்படி ஒரு ஆனந்தம் இருக்கிறதா, இந்த ஸ்வரூபத்தை அடைந்தால் அனைத்து துக்கமும் விலகிவிடுமாமே என்றெல்லாம் எல்லோருக்கும் ஆத்மாவைப் பற்றி அறிந்துகொள்வதில் விருப்பம் இருக்கிறது. ஆனால், யாரும் முயற்சிப்பதில்லை. ஆக, உபதேசம் யாரையும் திருத்துவதில்லை.

கிராமங்களில் நெல்லை உணர்த்தி வைப்பர். அந்த நெல்லை மாடு வந்து கவ்விக்கொண்டு போகும். அந்த மாட்டின் வாயில், அந்த நெல்லை காவல் காப்பவன் ஓங்கி அடிப்பான். அந்த மாடு உடன் போய்விடும். திரும்பி அந்த அடி மறந்தவுடன் அந்த மாடு வரும். மறுபடி அந்த காவல்காரன் அடிப்பான். இந்த மாடு எப்பொழுது இப்படி வருவதை நிறுத்தும் என்றால், அந்த காவல்காரன் கொடுத்த அடி மறக்க முடியாததாக இருந்தால், மாடு வருவது நின்று போகும்.

அதுபோல் உலகில் பலவிதமாக துன்பங்களை, பகவான் ஒருவருக்கு கொடுத்து, அவருடைய அகந்தையையும், உலக வாசனைகளையும் அழிப்பான். உலகில் துக்கம் கொடுக்கும் அனுபவம் போல் வேறு எந்த உபதேசமும் தருவதில்லை.

ஒருவர் நிறைய ஶாஸ்த்ரம் படிக்கிறார். குருவின் உபதேசங்களை கேட்கிறார். ஆனால், அவர் அகந்தை அழிவதில்லை. குருவும்,

பகவானும் அத்தகைய ஒரு ஜீவனுடைய அகந்தையை, பலவிதமான துக்கங்களையும் கொடுத்துத்தான் அழிக்கின்றனர். ஏன் என்றால் அனுபவம் கொடுக்கும் ஒரு பாடத்தை ஒருக்காலும் உபதேசம் தருவதில்லை. அனுபவம் ஒருவரை மிக வேகமாக திருத்தும்.

ஒருவர் நிறைய நல்ல காரியங்களும், புண்ய கர்மங்களும் செய்து வருகிறார். பாகவதம், ராமாயணம் பாராயணம் செய்து வருகிறார். குருவிடம் பக்தியாக இருக்கிறார். தீர்த்த யாத்திரை செய்கிறார். அவருக்கு நிறைய கஷ்டம் வருகிறது. உலகில் பேசுவர், ''இவருக்கு போய் கஷ்டம் வருகிறதே. இவ்வளவு நல்லவராக இருக்கிறாரே'' என்று. அவ்வளவு நல்லவராகவும், குருபக்தி பண்ணுபவராகவும் இருப்பவருக்குத்தான் கஷ்டங்கள் வரும். அவர் அந்த ஜன்மாவிலேயே அனைத்து கர்மங்களையும் அனுபவிக்க வேண்டி இருப்பதால், அவருக்கு கஷ்டம் வருகிறது. அவர் நிறைய புண்யங்கள் பண்ணி இருப்பதால்தான், பாபம் அனைத்தையும் ஒருசேர ஒரே ஜன்மாவில் அனுபவிக்க வருகிறது. அதனால்தான் பெரிய மஹாத்மாக்களான ஸ்ரீராமக்ருஷ்ண பரமஹம்ஸர், ரமணர் போன்ற மஹாத்மாக்களுக்கும் ப்ரதிகூலங்களும், கஷ்டங்களும் வருகிறது.

வீட்டில் நிறைய சமையல் பண்ணி உள்ளோம். விதவிதமான தின்பண்டங்கள் பண்ணி உள்ளோம். இரவு 8 மணி அளவில், ஊருக்கு செல்வதாக உள்ளோம். எல்லோரும் சாப்பிட்ட பின்னரும், மீதியாகி விட்டது. என்ன செய்கிறோம்? எல்லா உணவையும் மறுபடியும் எல்லோரும் போட்டுக்கொண்டு காலிசெய்து விடுகிறோம். ஏனெனில் பாத்திரங்களை எல்லாம் கவுத்து வைக்கப்போகிறோம். மீதி வைத்தால் அங்கு சாப்பிடுவதற்கு ஆளில்லை.

அதுபோல்தான், இதுவே கடைசி ஜன்மவாக இருப்பவர்களுக்கு எல்லா கஷ்டமும் வருகிறது. அவர்களுடைய கர்மம் அனைத்தும் அப்படியே அழிந்துவிடுகிறது. இதுவும், பகவானின் ஒரு க்ருபைதான். உலகில் மரணம் வருவது கூட பகவானின் அனுக்ரஹம்தான். ஏனெனில், இவ்வுலகில் பிறந்த அனைவருக்கும் மரணம் என்பது இல்லையெனில், எல்லோருக்கும் இதுவே நரகமாகப் போகும்.


அதன்பின், இந்த உலகை விட்டு விடுதலை பெறுவதற்கு ஒரு முயற்சி செய்ய வேண்டி வரும். சௌரியங்காட்டினை சமுக்கற்றதென்றே - அதனால் பகவான் எப்படி அகந்தையை அழிக்கிறார் என்றால், பலவித சிரமங்களை கொடுத்து, எப்படி எல்லாம் அகந்தையை அழிக்க முடியுமோ அப்படி எல்லாம் அழிக்கிறார்.

ஒருவர், எல்லாம் பகவானின் செயல், குருவின் செயல் என்று பேசிய வண்ணம் இருக்கிறார். ஆனால், அவர் பேங்க்கில் நிறைய பணம் போட்டு பூட்டி வைத்திருக்கிறார். வீடு வாங்கிவிட்டார். அவர் வாய் மட்டும் எல்லாம் பகவான் செயல் என்று சொல்லி வருகிறது. ஆனால், அவரால் அகந்தையை விட்டுக் கொடுக்க முடியாது. ஏனெனில், அவருக்கு தேக அபிமானம் அந்த அளவு இருக்கிறது. அப்படிப்பட்டவருக்கு ஈஶ்வரன் நிஜமாகவே ஒரு நல்ல பாடத்தை கற்பித்து அவருடைய பணம் பொய், வீடு பொய் என்று காண்பித்து எல்லாம் உண்மையிலேயே பகவான் செயல்தான் என்று நிரூபித்தால், அவர் அதை அனுபவத்தில் உணர்வார். தன் கையால், தனது சக்தியால் ஆவதும், ஆவதற்கும் ஒன்றுமில்லை என்று ஆனபின், ஈஶ்வர சக்தியை நம்பவேண்டி வந்துவிடும்.

இப்படி பகவான் ஏன் துக்கத்தை கொடுக்க வேண்டும்? இப்படி ப்ரக்ருதி எல்லாவற்றையும் ஸாரம் இல்லாதது என் காண்பித்து, தனது பேரானந்தத்தை அப்படிப்பட்டவருக்கு கொடுப்பான். ஆக, பணம் வந்தால் கூட பகவான் சௌகரியம் கொடுக்கிறான் என்று சொல்ல முடியாது.

பணமும், அதிகாரமும் இருப்பவர்களுக்கு அகங்காரமும், மமதையும் அதிகமாகி விடும். ராமாயணத்தில் ஒரு உபகதை வருகிறது. ராமர் ராஜ்யபரிபாலனம் செய்துவரும் காலத்தில், ஒரு நாய் அவருடைய ராஜசபையின் வாசலில் வந்து நின்றது. ராமர் லக்ஷ்மணனை அனுப்பி எதற்காக அந்த நாய் வந்துள்ளது என்று விசாரிக்கச் சொன்னார். லக்ஷ்மணன் அந்த நாயிடம் என்ன விஷயம்? என்று விசாரிக்கிறார். அந்த நாய் சொல்கிறது, ''நான் ராஜசபைக்குள்

வரகூடாது. ஏனெனில், நான் ஒரு தாழ்ந்த பிறவி. எங்கு ப்ராஹ்மணர்கள் வாழ்கின்றனரோ, எங்கு தெய்வம் கோவிலில் உள்ளதோ, எங்கு ராஜாக்கள் வாழ்கின்றனரோ அங்கு நான் செல்லக்கூடாது. ஆதலால், நீ ராமரைக் கூப்பிடு. அவரிடம் நான் பேசவேண்டும்'' என்றது.



லக்ஷ்மணன் நடந்தவற்றை ராமனிடம் சொல்ல, ராமரும் போய் கேட்டார். ராமபிரானிடம் அந்த நாய் சொல்கிறது, ''நான் என் வழியில் தெருவில் சென்றுகொண்டு, யார் என்ன சாதம் போடுகிறார்களோ, அந்த சாதத்தை சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். என் பக்கத்தில் பிக்ஷை எடுக்கக்கூடிய ஒரு ப்ராஹ்மணனும் வந்தான். அவன் என்னை ஓங்கி ஒரு தடியால் அடித்தான். எனக்கு உடம்பெல்லாம் வலிக்கிறது. இந்த பிக்ஷு ப்ராஹ்மணனுக்கு நான் என்ன கெடுதல் செய்தேன். அவன் ஏன் என்னை அடித்தான். நீங்கள் விசாரிக்க வேண்டும்'' என்றது.

ராமன் ஆணையிட, லக்ஷ்மணன் தேடி அந்த ப்ராஹ்மணனை கூட்டி வந்தான். ராமன் அந்த ப்ராஹ்மணனைப் பார்த்து, ''இந்த நாயை அடித்தது வாஸ்தவமா?'' என்று கேட்டான். அவனும்

ஆமாம் என்றான். ஏன் என்று ராமன் கேட்க, அவனும், ''நான் இன்று பல வீடுகளில் பிக்ஷை கேட்டேன். யாரும் போடவில்லை. எனக்கு ஒரே பசி. கோபம் வேறு. யாரையாவது அடிக்கவேண்டும் போலிருந்தது. இந்த நாயை அடித்தேன். என்னால், வேறு யாரை அடிக்க முடியும்?'' என்றான். ராமபிரான் அதைக் கேட்டபின் நாயிடம், ''இதற்கு சரியான தண்டனையை நீயே சொல். அதை நான் அவனுக்கு விதிப்பேன்'' என்றான்.

நாய் பதில் சொல்லியது, ''அவனை குலபதியாக பண்ணிவிடுங்கள்'' என்று. (குலபதி என்பவர் ப்ராஹ்மண குலங்கள் வாழும் மத்தியில், அவர்களுக்கு தலைவர் போல், பலவித மான்யங்களுடன், ராஜபோகமாக வாழ்வர்.)

இதைக் கேட்டு, லக்ஷ்மணன் ஆனந்த கண்ணீர் விட்டான். ராமரைப் பார்த்து சொன்னான். ''ராமா! இதுதான் உன் ராஜ்யம். அந்த நாயானது அந்த ப்ராஹ்மணனுக்கு தண்டனை கொடுக்க சொல்லவில்லை. மன்னிக்க சொல்லவில்லை. ஆனால், ராஜபோகமாக வாழ பண்ணிவிட்டதே'' என்றான். ராமபிரான் அதற்கு பதில் சொன்னான், ''லக்ஷ்மணா? அந்த நாய் அந்த ப்ராஹ்மணனுக்கு க்ஷேமத்தை செய்யவில்லை. ஏனெனில், இந்த நாய் போன ஜன்மத்தில் குலபதியாக இருந்து நிறைய பாபங்கள் செய்தது. அதனால் இப்படி கஷ்டப்படுகிறது. இந்த ப்ராஹ்மணனும் அப்படி கஷ்டப்படட்டும் என்று சொல்கிறது'' என்றான்.

ஆக, யார் கையில் அதிகாரமும், பலமும் இருக்கிறதோ அவர்கள் நிறைய பாபம் செய்வர். ஏனெனில் அதிகாரம் வந்தவுடன், அவர்களின் புத்தி பேதலித்து விடும். உலகில் அதிகாரமும், பணமும் உள்ளவர் தலை, கால் புரியாமலிருப்பதை பார்க்கிறோம் அல்லவா? ஆக, பணமும், அதிகாரமும் கொடுத்தால் பகவான் சௌகரியம் பண்ணித் தருகிறான் என்று சொல்வதும், நினைப்பதும் தவறு.

(தொடரும்)

---

## அறிவிப்பு

வேதகதைகள் ஜூன் 2001 மதுரமுரளியில் தொடரும்

# மஹாபாரத கதைகள்

— **நளோபாக்யானம்** (தொடர்ச்சி)

நாகம் சென்றவுடன், நளன் சிலநாட்களில் அயோத்தியை அடைந்து, ருதுபர்ண ராஜனிடம் தன்னை குதிரைகளை நடத்துவதில் மிகவும் ஸமர்த்தன் என்று அறிமுகப்படுத்திக்கொண்டு, அவனிடம் ஸேவகனாக அமர்ந்தான். நளன் தன்னை ஶில்பஶாஸ்திரத்திலும், ஸமையற்கலையிலும் வல்லவன் என்று தெரிவித்துக்கொண்டதால், ருதுபர்ணன் நளனை மிகவும் கௌரவமாக நடத்தினான். முன்னரே தன்னிடம் வந்து சேர்ந்திருந்த வார்ஷ்ணேயனையும், நளனுக்கு துணைவனாக இருக்கப்பண்ணினான். அயோத்தியில் குதிரைகளை பராமரித்துக்கொண்டு, நளன் தன்னை மறைத்துக்கொண்டு (தன்னுடைய நிஜஸ்வரூபத்தையும், வரலாற்றையும் மறைத்து) வாழ்ந்தான்.

நளன் பலகாலும் தமயந்தியைப் பற்றி வருந்தியவாறே இருந்தான். காட்டில் தனியாக விட்டு வந்தோமே என்று ஒரு குற்ற உணர்ச்சி அவனிடம் பெரிதாக இருந்தது. பலவிதமாய் தனக்கு தானே ஆலோசித்து அது தன்னுடைய குற்றமில்லை, தன்னை மீறின விதியின் செயல் என்று எண்ணி ஆறுதல் தேடுவான். தனிமையில் பலவிதமாய் புலம்புவான். வார்ஷ்ணேயன் ஒருநாள் இதை செவியுற்று, ''நண்பனே! எந்தப் பெண்ணைப் பற்றி புலம்புகிறாய்? யார் அவள்?'' என்று வற்புறுத்திக் கேட்டான். அதற்கு நளன், ''மதிகெட்ட ஒரு மூடனுக்கு, ஒரு ப்ரியமான அன்பு மனைவி வாய்த்தாள். ஒரு காரணத்தினால், அந்த அறிவிலி தனது ப்ரிய மனைவியுடன் காட்டுக்கு வந்தான். காட்டில் அவளை தனியாக விட்டு வந்துவிட்டான் அந்த மூடன். அந்த அபலை என்னவானாளோ என்று கவலைப்படுகிறான். கஷ்டத்திலும் அவனைக் கைவிடாத அந்த பதிவ்ரதை இன்னும் உயிரோடிருப்பது அரிது என நினைத்து அழுகிறான்'' என அரைகுறையாக சொன்னான்.

இங்கு நிலைமை இப்படி இருக்க, தமயந்தியின் தந்தையான பீமராஜன், பல ப்ராஹ்மணர்களை அழைத்து, நளனையும், தமயந்தியையும் தேடி பல நாடுகளுக்கும் தூது அனுப்பினான்.

அவனுக்கு நளனுக்கும், தமயந்திக்கும் நேர்ந்த கதி வார்ஷ்ணேயன் மூலமாக தெரிந்திருந்தது. நளன் குழந்தைகள் அவனிடம் வளர்ந்து வந்தனர். அவன், தான் தூது அனுப்பிய ப்ராஹ்மணர்களை அழைத்து, ''நீங்கள் தமயந்தியையோ, நளனையோ கண்டு விவரம் கொடுப்பீர்கள் எனில், உங்களுக்கு பெரிய வெகுமதி அளிப்பேன்'' என்றான்.

பல ப்ராஹ்மணர்கள் பீமராஜனின் ஆணையை சிரமேற்கொண்டு சிரத்தையாக தேடினர். அதில் ஸுதேவன் எனும் ப்ராஹ்மணன் பல இடங்களில் தேடிய பிறகு சேதி நாட்டு அரண்மனையில் தமயந்தியைக் கண்டார். தன்னிடம் சொல்லப்பட்ட அடையாளங்களிலிருந்தும், தமயந்தியின் நடத்தையில் இருந்தும் அவள் ராஜஸ்த்ரீ என்றும், அவள் மற்றவரிடம் இருந்து சற்று தனித்திருப்பதாலும், முகம் சற்று வாடி இருப்பதாலும் தமயந்தி என்று அறிந்துகொண்டார். மாருதி பல இடங்களில் தேடி அலைந்தபின், சீதையை அசோகவனத்தில் கண்டவுடன், எத்தகைய ஸந்தோஷம் அடைந்தாரோ, அத்தகைய மகிழ்ச்சி அடைந்தார், அந்த நல்ல ப்ராஹ்மணரான ஸுதேவன்.

தமயந்தியை தனியாக அழைத்துப் பேசிய ஸுதேவன், தன்னைப் பற்றி கூறினார். தமயந்தி ஸுதேவனை தன் தந்தையின் தேசத்திலிருந்து வந்தவன் என்று ஊர்ஜிதம் செய்தபின், தனது பெற்றோர் மற்றும் அனைத்து உறவினரின் க்ஷேமத்தையும் விசாரித்தாள். சோகத்தால் பீடிக்கப்பட்ட அவளுக்கு ஸுதேவன் ஆறுதல் கூறினான். ஆதரவாய் அதுகாறும் நடந்து வந்த சேதி நாட்டு அரசனிடமும், ராணியிடமும் ஸுதேவன் தமயந்தியை பற்றி விவரமாய் எடுத்துக்கூறி தன்னுடன் அனுப்புமாறு வேண்டினான். விதர்ப்பதேச ராஜனான பீமராஜனின் மனைவி, சேதிநாட்டு ராணியின் ஸகோதரி. தனது ஸகோதரியின் பெண்தான் தமயந்தி என்று அறிந்த பின், அந்நாட்டு ராணி மிக்க மகிழ்ந்து, அவளை தக்க துணையுடன் வாகனத்தில் விதர்ப்பதேசத்துக்கு அனுப்பி வைத்தாள். தமயந்தி அங்கு வந்து தன் தாய், தந்தையரிடம் நளனை தேடுவதற்கு முயற்சி எடுக்க பலவாறு வேண்டினாள்.

சீதையைக் காணாமல் எவ்வாறு திரும்புவது என்று வருந்திய வானரர்களுக்கு ''சீதை இருக்கிறாள். என் கண்களால், இலங்கையில்

அவளைக் காண்கிறேன். உங்களுக்கு வெற்றி கிட்டும்'' எனும் ஸம்பாதியின் செய்தி எப்படி மேலும் கடலைத் தாண்டுவதில் ஊக்கமும், நம்பிக்கையையும் அளித்ததோ, அதுபோல் நளனும், தமயந்தியும் நாடிழந்து காடு சென்றது அறிந்து, மேலும் அவர்களின் விவரமறியாது இருந்த பீமராஜனுக்கு, தமயந்தியை பார்த்தது துக்கத்திலும் ஓரளவு சுகமளித்தது.

ஒரு தடவை முயன்றதில் பலன் கண்ட பீமராஜன், நளனைத் தேட மீண்டும் தூதுவர்களை அனுப்ப முடிவு செய்தான்.

(தொடரும்)

*With best compliments from*

**Magna Chemical Manufacturers Private Limited**

A-112/113, PIPDIC Industrial Estae,
Mettupalayam, Pondicherry - 605 009.
Phone : 371171 / 371932 / 274753
Fax : 0413 / 371633

*Quality Manufacturers and Exporters of:*

*Sodium Bisulphite, Sodium Meta Bisulphite*
*Sodium Sulphite Superfine, Sodium Sulphite Technical*
*Sodium Carbonate Anhydrous, Sodium Carbonate Monohydrate*
*Sodium Thiosulphate Anhydrous*

# செய்திகள்

### மார்ச் 25-ந் தேதி முதல் ஏப்ரல் 2-ந் தேதி வரை

மருதநல்லூர் ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள் மடத்தில் நம் ஸ்வாமிகளின் சிஷ்யர் ஸ்ரீ பாலாஜி சர்மா அவர்களின் ஸ்ரீமத்ராமாயண நவாஹ உபன்யாஸம் நடைபெற்றது.

### ஏப்ரல் 1-ந் தேதி

மருதாநல்லூர் ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள் மடத்தில் நடைபெற்ற ஸ்ரீ ராமநவமி மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

### ஏப்ரல் 2-ந் தேதி—ஸ்ரீ ராமநவமி

சென்னை ப்ரேமிகபவனத்தில் மாலையில் ஸ்ரீமாதுரிஸகி ஸமேத ப்ரேமிகவரதனுக்கு திருமஞ்சனம் நடைபெற்றது. ஸ்ரீமத்ராமாயண பாராயணம், பீஜதானம், நாம ஸங்கீர்த்தனம் முதலியவை நடைபெற்றன.

### ஏப்ரல் 5-ம் தேதி

நமது பாடசாலையினுடைய வாக்விலாஸினி ஸபையில் பாடசாலை வித்யார்த்திகளுக்கு ஸம்ஸ்க்ருதத்தில் வாக்ஸ்பர்தா (பேச்சுப்போட்டி) நடைபெற்றது. அதேபோல், ஶ்லோகங்கள், ஸஹஸ்ரநாமம் முதலியவற்றை ஒப்பிக்கும் போட்டியும் நடைபெற்றது. இப்போட்டிகள், ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் நடைபெற்றன. போட்டிகளுக்கு ப்ரஹ்மஸ்ரீ தாராமங்களம் ஸுப்ரஹ்மண்ய ஶாஸ்த்ரிகள் மற்றும் நமது பாடசாலையின் யஜுர்வேத அத்யாபகர் ப்ரஹ்மஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி அவர்களும் நடுவர்களாக இருந்தனர். போட்டிகளின் முடிவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வித்யார்த்திகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

### ஏப்ரல் 6-ந் தேதி

திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன் திருக்கல்யாண உத்ஸவம் நம் மிஷன் சார்பில் நடைபெற்றது.

(தொடர்ச்சி பின் அட்டைப்படம்)

(செய்திகள் தொடர்ச்சி)

### ஏப்ரல் 13-ந் தேதி

சென்னை, பம்மல் மதுரமுரளிபவனத்தில் நமது ஸத்ஸங்கத்தைச் சேர்ந்த மஹிளா மண்டலியினரின் திவ்ய நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

### ஏப்ரல் 14-ம் தேதி—தமிழ்ப் புத்தாண்டு - விஷுக்கனி

சென்னை ப்ரேமிகபவனத்தில் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு மாதுரிஸகி ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு சிறப்பு திருமஞ்சனமும் ஆராதனையும் நடைபெற்றது. பகல் 11 மணிக்கு பஞ்சாங்கபடனம் நடைபெற்றது. வரதானம் செய்யப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிகள், வந்திருந்த அத்தனை பக்தர்களுக்கும் விஷுக்கனி ப்ரஸாதம் கொடுத்தார்கள். நீர் மோர், பானகம் ப்ரஸாதங்கள் விநியோகிக்கப்பட்டன. இரவு பம்மலில் ஸ்ரீ ஸீதா கல்யாண வைபவத்தில் நடைபெற்ற பவ்வளிம்பு உத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டார்கள்.

### ஏப்ரல் 19-ந் தேதி — ஏகாதஶீ

சென்னை ப்ரேமிக பவனத்தில் இரவு 7 மணி முதல் இரவு 9 மணிவரை திவ்யநாமகீர்த்தனம் நடைபெற்றது.

### ஏப்ரல் 23-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் இரவு 7 மணி முதல் 10 மணி வரை திவ்யநாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

### ஏப்ரல் 26-ந் தேதி—அக்ஷய த்ருதியை

சென்னை பம்மல் மதுரமுரளிபவனத்தில் இரவு 7 மணி முதல் இரவு 9 மணி வரை விசேஷ திவ்ய நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

பம்மல் மதுரமுரளிபவனத்தில் தினமும் மாலை வேளைகளில் ஸத்ஸங்கம் நடைபெறும்.

முகவரி : மதுரமுரளிபவனம்
No. 5, 6th Cross Street,
LIC Colony, Pammal, Chennai.

மங்களானி பவந்து